பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 18 | ஞாயிற்றுக்கிழமை 04.11.2018 | கதிர் 363

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக்காலையில் அன்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பை எடுத்தார். "என்ன... உம்மட கொலம் இப்பவெல்லாம் வலு சூடாய் இல்லை.... கொழும்பு அரசியல் கொதிக்கிறது.... நீர் என்னவென்றால் ஆறினவையைப் பிசைஞ்சு கொண்டு இருக்கிறீர்...!" – எனச் சீறினார்.

பக்கம் 02

# ரணிலுக்கே ஆதரவு கூட்டமைப்பு முடிவு

## நடுநிலை வகிப்பதென்பது அராஜகம் எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 04

அரசமைப்பை முற்றிலும் மீறுவதாகவும் சட்டவிரோதமாகவும் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாக முடிவெடுத்துள்ளது.

பக்கம் 11

## ரயிலிருந்து தவறி வீழ்ந்ததால் யாழ்.இளைஞன் பரிதாபச் சாவு

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்



வவுனியா, நவ. 04

வவுனியாவில் ரயிலிலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, சாந்தசோலை சந்தியில் இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ரயிலிலேயே இந்தப் பரிதாபச்

பக்கம் 11

## கூட்டமைப்பு எம்.பிக்களை பேச அழைக்கிறார் மைத்திரி

கொழும்பு, நவ. 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சந்திப்புக்காக அழைத்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் ரணில்

பக்கம் 11

## இரத்தக் களறியைத் தவிர்க்க காலம் குறைந்து வருகின்றது

### ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

அரசியல் நெருக்கடிகளினால் நாட்டில் இரத்தக்களறியொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கானகாலம்குறைவடைந்து வருகின்றது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 11

## மிகவும் நல்லவர் ரணில்!

### புகழாரம் சூட்டுகிறது மஹிந்த அணி

கொழும்பு, நவ 04

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் நல்லவர் என்றும், அவரைச் சூழ உள்ளவர்கள் காரணமாகவே நாட்டில் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

பக்கம் 11

## 16ஆம் திகதியன்றே நாடாளுமன்று கூடும்

கொழும்பு, நவ.04

நாடாளுமன்றம் எதிர்வரும் 7 ஆம் திகதி கூட்டப்படவிருப்பதாகக் கூறப்படுவது போலியான பிரசாரம் என அரச ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பக்கம் 11

## இலங்கையில் வன்முறை வெடிக்கலாம் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுங்கள்

### ஐ.நாவிடம் சமந்தா பவர் வலியுறுத்து



நியூயோர்க், நவ. 04

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கண்மூடித்தனமான செயல்கள் இலங்கையில் வன்முறையை உருவாக்கும் சாத்தியம் உள்ளது என்றும், ஐ.நா. தலையிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்கத்

பக்கம் 11

## மஹிந்தவின் பக்கம் 'பல்டி' அடித்த வியாழேந்திரன் மீது நடவடிக்கை!

### கூட்டமைப்பு உயர்மட்டக் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், மைத்திரி – மஹிந்த தலைமையிலான புதிய அரசில் பிரதி அமைச்சர் பதவியை ஏற்றுள்ளமைக்குக் கடுமையான கண்டனத்தை

பக்கம் 11

## ஆட்சியைக் கவிழ்க்க மைத்திரி – மஹிந்த 4 மாதங்களுக்கு முன்பே ரகசியத் திட்டம்

### அம்பலப்படுத்தினார் நாமல் எம்.பி.



கொழும்பு, நவ. 04

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக நான்கு, ஐந்து மாதங்களாகவே மைத்திரிபால சிறிசேனவும் மஹிந்த ராஜபக்ஷவும் திட்டமிட்டு வந்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்

பக்கம் 11

## மேலும் 5 ஐ.தே.க. எம்.பிக்களுக்கு வலை வீச்சு!

கொழும்பு, நவ.04

எதிர்வரும் சில தினங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்கவுள்ளனர் எனக் கலாசார விவகார, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அம்பாறைத் தமிழரை விற்று மஹிந்தவிடம் சரணடையேன்

### வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் கோடீஸ்வரன் எம்.பி.



கொழும்பு, நவ. 04

பல கோடி ரூபாவுக்காக அம்பாறை மாவட்ட தமிழர்களை நான் ஒருபோதும் விற்க மாட்டேன்.

பக்கம் 11

## நீக்கப்பட்டார் வியாழேந்திரன்

### சித்தார்த்தன் அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் அமைப்பில் சார்பில் போட்டியிட்டு மட்டக்களப்பு

பக்கம் 11

## தமிழரைப் பாதுகாக்கவே பிரதி அமைச்சராகினேன்

### வியாழேந்திரன் விளக்கம்



கொழும்பு, நவ. 04

கிழக்குத் தமிழர்களின் இருப்புக்கும், அரசியல் ரீதியான அபிலாஷையுடன் கூடிய எண்ணத்துடன்,

பக்கம் 02

# நாட்டின் அரசியல் நிலை முற்றுமுழுதாக சீர்குலைவு

## மைத்திரி, மஹிந்த, ரணில் இணைந்து பேச வேண்டும்

கொழும்பு, நவ 04

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் அமைதி, ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கான அச்சுறுத்தல் நிலைமை தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸில் ஒவ் சிறிலங்கா அதன் ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸில் ஒவ் சிறிலங்கா, அதன் தலைவர் என்.எம். அமீன் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடி நிலைமை தொடர்பில் சிரேஷ்ட அரசியல்வாதிகள் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடி தீர்வொன்றை பெற்றுக்கொள்ளுமாறு முஸ்லிம் கவுன்ஸில் ஒவ் ஸ்ரீலங்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கு பெருமைக்குரிய ஒரு ஜனநாயக வரலாறு காணப்படுகின்றது. கடந்த காலங்களில் அரசமைப்பு தடைப்பட்ட எந்தச் சந்தர்ப்பமும் இல்லை. இலங்கையர்கள் என்ற வகையில், ஒரு நிலையான நாட்டைநோக்கிச் செல்வதற்கு நாம் ஜனநாயக விழுமியங்களை மற்றும் மனித உரிமைகளை நிலைநிறுத்த முயற்சிக்க வேண்டும். என குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நெருக்கடியான சூழ்நிலையில் உடனடியாக நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு வசதிகளை ஏற்படுத்துமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பொறுப்புணர்வுடன் செயற்படுமாறும் சுயநல சக்திகளில் சிக்கி வன்முறைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்கா அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

## 18 வயதுக்கு மேற்பட்டோர் விவரம் 4 மாதங்களுக்கு ஒரு தடவை பதிவு

கொழும்பு, நவ. 04

18 வயதுக்கு மேற்பட்டோரின் பெயர்களை 4 மாதங்களுக்கு ஒரு தடவை வாக்காளர் இடாப்பில் இணைத்துக்கொள்வதற்குத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

18 வயது பூர்த்தியடைந்த பெரும்பாலானோர் தமது 19 வயதிலேயே முதல் வாக்கைப் பதிவு செய்கின்றனர்.

இதைத் தவிர்ப்பதற்காகவே 4 மாதங்களுக்கு ஒரு தடவை 18 வயது பூர்த்தியடைந்தோரின் பெயர்களை இடாப்பில் உள்ளடக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினரிடம் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.(ஐ)

## அமைச்சர் பதவியை ஏற்கவேமாட்டேன்

### ராஜித சேனாரத்ன திட்டவட்டம்

கொழும்பு, நவ.04

தான் ஜனாதிபதியைச் சந்தித்து அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ள இருப்பதாக ஊடகங்களில் வெளியாகின்ற செய்தி உண்மைக்குப்புறம்பானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் பெரும்பான்மையை விரைவில் நாடாளுமன்றத்தில் நிரூபிப்பதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்குத்தான் ஒரு போதும் துணை நிற்பதில்லை என்றும்–

அமைச்சுப்பதவியைப்பெற்றுக் கொண்டு ஜனநாயகத்திற்கு துரோகமிழைப்பதைத் தான் ஒருபோதும் செய்யப் போவதில்லை என்றும்– அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாஸ்தவம்தான். இயன்றயளவுக்கு உள்வீட்டுத் தகவல்களைக் கசிய விட முயற்சிக்கின்றேன்.

தமிழ்க்கூட்டமைப்பில் ஏற்கனவே சிவசக்தி ஆனந்தன் வெளியில். இப்போது மற்றொரு விக்கெட்டும் அவுட்.

வியாழேந்திரன் வியாழனன்று கனடாவில் இருந்து புறப்பட்டார். வெள்ளியன்று கொழும்பில் வந்திறங்கிய அவரைக் கட்டுநாயக்காவில் வைத்தே சம்பந்தப்பட்ட குழு அள்ளிச் சென்றது. அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு அவரது கட்சித் தலைவர் சித்தார்த்தன் எடுத்த முயற்சி கூடப் பலிக்கவில்லை. கடைசியாக அவர் பிரதி அமைச்சர் பதவி ஏற்ற பின்னர்தான் வெளிச்சத்துக்கு வந்தார்.

இந்த 'பல்டி' சம்பந்தனைப் பெரிதும் பாத்திருப்பதாகத் தெரிகின்றது. அன்று மாலையில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வந்த புளொட் தலைவர் சித்தார்த்தனைக் கடிந்து கொண்டார் சம்பந்தன்.

*"ஆறு மாதங்களாக உங்களுக்குப் படித்துப் படித்துச் சொன்னேன். இப்படி ஆகும், ஆகும் என்று எச்சரித்து வந்தேன். அவ்வாறு நடக்காது, நடக்காது என்று சமாதானம் சொன்னீர்கள். பார்த்தீர்களா இப்படியாகி விட்டது?"* – என்று நொந்தார் சம்பந்தன்.

கூட்டமைப்பில் அவர் மாறுவார், இவர் மாறுவார் என்று பலரின் பெயர்களும், புரளிகளும் தாறுமாறாக அடிபடுகின்றன. அதில் ஒருவர் சம்பந்தனுக்குக் கொஞ்சம் நெருக்கமானவர். அதனால் அவர் குறித்து சம்பந்தன் கூடுதலாகக் கரிசனை கொண்டிருப்பது புரியத்தக்கதே.

நேற்றுக்காலை கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களைச் சந்தித்தபோது, இப்படி பெயர் அடிபட்ட ஒவ்வொருவர் குறித்தும் அந்தத் தலைவர்களிடம் விவரம் கேட்டறிந்தார் சம்பந்தன்.

அவர் என்ன செய்வார், இவர் என்ன செய்வார் என விசாரித்தார்.

அதிகம்பெயர் அடிபட்டவர்த்தகப் புள்ளி பற்றிய விடயம் வந்தது.

கூட்டமைப்பின் பங்காளிக்கட்சி ஒன்றின் தலைவர், மேற்படி எம்.பி. கடைசிவரை அணி தாவமாட்டார் என்று அடித்துக் கூறினார். அதைக் கேட்டதும் சம்பந்தனுக்குத் திருப்தியோ திருப்தி.

*" ஏன் அப்படி – அவ்வளவு – உறுதியாகச் சொல்லுகின்றீர்கள்?"* – எனக் கேட்டார் சம்பந்தன்.

*"அமைச்சர் பதவி, பணம் ஆகியவற்றைவிட அவருக்கு வேறுவிடயம் உள்ளது. என்னிடமே அதை அவர் கூறியிருக்கின்றார். 'சம்பந்தனுக்குப் பிறகு அந்த இடம் எனக்குத்தான். நான்தான் வரிசையில் சீனியர்' என்று என்னிடமே நேரடியாகக் கூறியிருக்கின்றார் அவர். உங்கள் இடத்துக்குக் கண் வைத்திருக்கும் அவர், அதை விட்டு விட்டு உதுக்கு எல்லாம் போகமாட்டார். லாப – நஷ்ட கணக்குப் பார்க்கும் திறமை அவருக்குத்தான் உண்டு."* – என்று பதிலளித்தார் பங்காளிக்கட்சித் தலைவர். விக்கித்துப் போனார் சம்பந்தன்.

★ ★ ★

கொழும்பில் அரங்கேறும் அரசியல் அலங்கோலம் குறித்து வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானத்துடன் தொலைபேசியில் உரையாடினேன்.

"கட்சிகளுக்கு இப்படி அணி தாவல் பிரச்சினை பெரும்பாலும் இறக்குமதிகளால் தான்!" – என்று கொதித்தார் அவர்.

" *விளங்கவில்லையே...?"* – என்றேன் நான்

விவரித்தார் அவர்.

*"முன்னர் பியசேனா மாறினார். இப்போது வியாழேந்திரன் மாறினார். ஏன், வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன் போன்றோர் கூட இதைத்தான் செய்தார்கள். அணி தாவிச் செயற்பட்டனர்.*

*"இவர்கள் எல்லோரிலும் ஓர் ஒற்றுமை இருக்கின்றது. அவர்கள் எல்லோரும் தத்தமது பதவிகளுக்கு எந்தெந்தக் கட்சிகளுக்கு ஊடாக வந்தார்களோ, அந்தக் கட்சியில் நீண்ட கால உறுப்பினர்கள் அல்லர். தேர்தல் சமயத்தில் – கடைசி நேரத்தில் – தேர்தலுக்காக – கட்சிகளுக்குள் உள்வாங்கப்பட்டார்கள். குறிப்பாகச் சொல்வதனால் 'இறக்குமதிகள்!'"* – என்று விசனம் தெரிவித்தார். அவர்.

*"கட்சிகள் 'சிற்'றுக்கு சண்டை பிடித்து, அவற்றை எடுத்துக் கொண்டு, அதற்குப் பின்னர் அதற்கு வேட்பாளர் போடுவதற்கு ஆள் தேடுவார்கள். தங்கள் கட்சியில் ஆள் இருக்காது. யாரையாவது ஒருவரை 'இறக்குமதி' செய்து அவரைத் தமது வேட்பாளராக நிறுத்துவர். இப்படிக் கடைசி நேர இறக்குமதிகள்தான் இவ்வாறு குத்துக்கரணங்கள் அடிக்கின்றனர். அணி மாறுகின்றன".* – என்றும் சினந்தார் அவர்.

அந்தச் சினத்திலும் கூட ஏதோ ஓர் அடிப்படை இருப்பதாகவே எனக்குப் படுகின்றது. உங்களுக்கு....?

**-மின்னல்-**

## சில அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

சில அமைச்சுக்களுக்குப் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய எஸ்.ஏ.சிசிரகுமார நீர்ப்பாசன நீர்வள இடர்முகாமைத்துவ அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், சுனில் ஹெட்டியாராச்சி திறனாற்றல் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயாலளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழுரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கும் தான் நான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ளேன் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கிழக்குப் பிராந்திய அபிவிருத்திப் பிரதியமைச்சருமான எஸ்.வியாழேந்திரன் (அமல்) தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்திய அபிவிருத்திப் பிரதியமைச்சராகப் பதவியை பொறுப்பேற்றமை குறித்து, நேற்று அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான் கிழக்குத் தமிழர்களின் நிலைப்பாட்டை உணர்ந்து கிழக்குத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும், தமிழர்களுக்குத் தார்மீக நோக்கத்துடன் நல்லது செய்யவேண்டும்.

தமிழ் மக்கள் மீது வைத்துள்ள தூரநோக்குடைய சிந்தனையின் அடிப்படையில்தான், நான் நாடாளுமன்றப் பதவியை வைத்துக் கொண்டு அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளேன்.

மாறாக கதிரையைச் சுடாக்கி வைப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை இனியும் வேடிக்கை பார்க்க முடியாது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தில் தெளிவான சூழ்நிலையில் தமிழர்களைப் பல்வேறுபட்ட விடயங்களில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கும், அமைச்சுப் பதவியை பாரமெடுத்துள்ளேன்.

பலர், இதைத் துரோகம் என்கிறார்களே. நான் எப்படி தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்துள்ளேன், தமிழரின் காணிகள் ஏனைய சமூகத்தால் வலுக்கட்டாயமாகப் பிடிக்கப்படும்போது, தன்னந்தனியாகக் குரல் கொடுத்தேன். அப்போது இருந்த ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

இன்று வரை மட்டக்களப்பில் காணி பிடிக்கப்பட்டுக்கொண்டே கொண்டிருக்கின்றது. தமிழர்களின் காணிகளை யார் தடுப்பார்? காரணம் தமிழர்கள் மத்தியில் சாணாக்கியமுள்ள அரசியல் பலமில்லை.

புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலை வலுக்கட்டாயமாக அரசியல் பலத்தின்மூலம் அமைத்த போது, தனியாக நின்று, நானே எதிர்த்தேன். அப்போது ஏனையவர்கள் எங்கே போனார்கள்? கிழக்கில் இருந்தவர்கள் ஏன் இவ்விடயத்தில் மௌனமானர்கள்?

எதிர்கட்சித் தலைவருக்கு இல்லாத அதிகாரமா? ஏன் மௌனம் காத்தார்கள்? ஒரு சத்தமிட்டாலே, நாடாளுமன்றம் கேட்கும் என்றால் ஏன் கேட்கவில்லை? மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் நன்மைக்காகவும், இருப்புக்காகவும் ஜனாதிபதியிடம் தனியாகவும், எதிராகவும், நான்தான் மகஜர் கொடுத்தேன்.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புலப்படாது. எனவே, கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் நிதானமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

வரும் அரசை எதிர்ப்பார்கள். ஆனால், வரவு – செலவுத் திட்டம், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கொடுப்பார்கள். இது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமில்லையா?

நான், அமைச்சுப் பதவி எடுத்தது எனது குடும்பத்துக் கல்ல. கிழக்கிலுள்ள ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும்தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது.

தமிழ் மக்கள் மத்தியில் அபிவிருத்தி என்பதே இல்லை. நமது நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்ட நிதிகளில் ஒரு கிராமத்துக்கு ஒரு இலட்சம், ஐம்பதினாயிரம் மட்டும்தான் ஒதுக்கமுடியும். ஏனைய சமூகத்துக்கு கோடிக்கணக்கில் அபிவிருத்திக்கு ஒதுக்கின்றார்கள்.

இதற்காக நான் பல அமைச்சுக்களிடம் கை ஏந்தி அபிவிருத்திகள் செய்தேன். காரணம் தமிழ் மக்களின் தேவைப்பாடு இவ்வாறு காணப்படுகின்றது. மாகாணசபை, நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன தாரை வ ார்க்கப்பட்டுள்ளன. இது தமிழினத் துரோகமில்லையா? இதற்கெதிராக நான் மட்டும்தான் குரல் எழுப்பினேன்.

படித்த தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வேலையில்லை. வேலை கொடுப்பதற்கு அரசியல் பலமில்லை. மாற்றுச் சமூகத்தில் உள்ளவர்களிடம்தான் பணத்தைக் கொடுத்து வேலையைப் பெற வேண்டிய துர்ப்பாக்கியநிலையில் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

கல்வித்தராதரம் உள்ள தமிழ் உத்தியோகத்தர்கள், அரசியல் பலமின்மையால் தட்டிக் கழிக்கப்படுகின்றார்கள். திணைக்களங்களில் நிர்வாகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதனைத் தட்டி கேட்கவும், நியமிக்கவும் பலமில்லை.

இதற்குத்தான் அமைச்சுப் பதவி தேவையாகவுள்ளது. ஒட்டுமொத்தத்தில் எதிர்க்கட்சிப் பதவியில் இருப்பதை விட அமைச்சுப் பதவி எடுத்து வேலைத்திட்டங்களைச் செய்வது சிறப்பானதாகும்.

நான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றதில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் எதுவித குழப்பமும் அச்சமும் கொள்ளத் தேவையில்லை. நான் உங்களுக்கு நல்லதைச் செய்யவுள்ளேன்.

வடக்கு மாகாணத்தில், இரண்டு அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன. வடக்கு மாகாணத்தின் அரசியல் தலைமைகள் முன்னுதாரணமாக செயற்படுகின்றார்கள். அதேபோன்று, கிழக்கின் தமிழ் அரசியல் தலைமைகள் முனைப்புடன் செயற்படும் நம்பிக்கை உள்ளது–என்றார். (ஐ)

# மாவீரர் தெய்வங்களின் தியாகத்துக்கு ஒருபோதும் நாம் துரோகம் செய்யோம்!

## சிறிதரன் எம்.பி. நேற்றுச் சத்தியம்



கிளிநொச்சி, நவ. 04

இந்த மண்ணிலே நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த அந்த மான மாவீரர்களிற்கும் அவர்களின் தியாகத்திற்கும் நாம் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழர்கள் இந்த மண்ணிலே ஓர் இலட்சியம் நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இலட்சியத்துக்காக ஆயிரமாயிரம் வேங்கைகளை விதை ஆக்கியவர்கள் நாங்கள்.

இலங்கையில் இருக்கின்ற எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களும் தமிழர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற சிந்தனையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவானாலும் சரி, மஹிந்த ராஜபக்ஷவானாலும் சரி, எமது இனத்தை எந்த வகையிலும் அடக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

எமது கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன், மஹிந்த ராஜபக்ஷவிடம் சென்று எங்கள் உரிமைகள் தொடர்பான வாக்குறுதிகளை எழுத்துமூலம் தந்தால் எமது கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடலாம் எனத் தெரிவித்தார். அதற்கு மஹிந்த மறுத்துவிட்டார்.

ஆட்சிக்கு வரத் துடிக்கும் எந்த ஆட்சியாளர்களும் எமக்கான அதிகாரத்தைத் தருவதற்குத் தயாராக இல்லை. தந்தை செல்வா அறவழியில் போராட்டம் முன்னெடுக்கின்ற போது, இறுதியில் தந்தை செல்வா, தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னபோது. எமது தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு வயது 16.

தந்தை செல்வாவுக்குத் தெரியாது பிரபாகரன் 30 வருடங்களாகத் தமிழர்களுடைய போராட்டத்தைக் கொண்டு செல்வார் என்று. ஆனாலும் போராட்டம் மௌனித்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பயணத்தை கொண்டு செல்கிறது. அதனை அடைவதற்காக முயற்சி செய்கிறது.


நாம் வாழவேண்டும் என்பதற்காகத் தன்னுடைய இன்னுயிர்களை ஈகம் செய்த அந்த மாவீரர்களுக்கு ஒருபோதும் நாம் துரோகம் இழைக்க மாட்டோம்.

ஆனால் தமிழர்களின் போராட்ட வரலாற்றிலே துரோகங்கள் ஒன்றும் புதியவையல்ல. ஆனாலும் தமிழர்கள் மொழி ரீதியாக தமிழ் மக்களுடைய வேணவாக்களை அடியோடு மறுக்கும், ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை.

இன ரீதியாக, அடையாள ரீதியாகத் தமிழர்கள் இன்னமும் அடக்கப்பட்டு கொண்டே இருக்கிறார்கள் என்கின்ற உண்மையை எவரும் மறந்துவிட முடியாது – என்றார். (ஐ)

## நவ. 6 முதல் 8வரை

# வடக்கு - கிழக்கில் புயலுடன் கனமழை




கொழும்பு, நவ. 04

இந்தியப் பெருங்கடலில் நிலைகொண்டுள்ள புயல் வரும் 6 தொடக்கம் 8ஆம் திகதிவரை இலங்கையைத் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் இரண்டு நாள்களும் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் கன மழைபொழியும். அதனால் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என வளிமண்டலவியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் நவம்பர் 2ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை மழை நீடிக்கும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே கடற்றொழிலாளர்கள் நவம்பர் 10ஆம் திகதிவரை கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமேல் மாகாணம் உள்ளிட்ட தென்னிலங்கையில் பெரும்பாலான நீர்நிலைகள் 96 சதவீத நீர்மட்டத்தை எட்டியுள்ளன எனவும் அடுத்துவரும் சில தினங்களுக்கு அதிக மழைவீச்சி பதிவாக உள்ளதால் அவை பெருக்கெடுக்கும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# மஹிந்தவுடன் சேருமாறு எனக்கு புலம்பெயர் தமிழர் வற்புறுத்தல்

## மனோகணேசன் புதுத் தகவல்

கொழும்பு, நவ. 04

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணையுமாறு புலம்பெயர் தமிழர்கள், என்னை வலியுறுத்தினார்களெனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

புதிய பிரதமராக மஹிந்த தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது சிறுபான்மையினர் வைத்திருந்த அனைத்து நம்பிக்கைகளையும் அவர் சிதைத்து விட்டார். மைத்திரியின் திடீர் அரசியல் நகர்வுகளை நாம் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை .

நாட்டில் இதற்கு முன்னர் யுத்தம் மற்றும் வெவ்வேறுபட்ட பிரச்சினைகள் எழுந்திருந்தன. இருப்பினும் ஜனநாயகத்துக்கு விரோதமாக எந்தவொரு அரசியல் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

ஆனால் தற்போது மக்களின் ஆதரவினால் ஆட்சியமைத்தவரிடமிருந்து அதிகாரங்கள் முரணான விதமாகப் பறிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாடாளுமன்றம் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதிகளில் ஏனைய கட்சி உறுப்பினர்களை மாற்றும் செயற்பாடுகளில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஈடுபட்டு வருகின்றது. இருப்பினும் நாம் இன்னும் மஹிந்தவைப் பிரதமராக ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்தவகையில் பெரும்பாலானோர் மஹிந்தவுடன் இணைந்து செயற்படுமாறு கோரினர். அதிலும் புலம்பெயர் தமிழர்கள் கூட என்னை வலியுறுத்தியமை கவலை அளிக்கிறது.

சஜித் பிரேமதாஸ, மத்துமபண்டார, கருஜயசூரிய ஆகியோரைப் பிரதமர் பதவியேற்கும்படி ஜனாதிபதி கோரியதாகவும் அவர்கள் முடியாதெனக் கூறியதால் மஹிந்தவை நியமித்ததாகவும் கூறுகின்றார். அவ்வாறாயின் மஹிந்த அமரவீரவை நியமித்திருக்கலாமே. ஏன் நியமிக்கவில்லை?

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கு, கிழக்கு, மலையக மக்களை ஏமாற்றிவிட்டார்–என்றார். (ஐ)

# தான் விரும்புபவரை பிரதமராக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு

## கூறுகிறார் முன்னாள் சபாநாயகர்

அரசமைப்பின் பிரகாரம் தான் விரும்புபவரைப் பிரதமராக நியமிக்கக் கூடிய அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு காணப்படுகின்றது என முன்னாள் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எனவே தற்போது மஹிந்த ராஜபக்ஷவே இந்த நாட்டின் பிரதமராவார். ஜனாதிபதியின் தீர்மானத்தை மீறியாராலும் செயற்பட முடியாது.

சபாநாயகருக்கும் அந்த அதிகாரம் கிடையாது என்பதும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது–என்றார். (ஐ)

# சுற்றாடல் பாதுகாப்பு ஆண்டாக 2019 ஜனாதிபதி மைத்திரிபால அறிவிப்பு

கொழும்பு, நவ. 04

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டை சுற்றாடல் பாதுகாப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குளறுபடிகளை தடையாகக் கருதாது இந்த ஆண்டு நிறைவடையும்போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி, அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலனறுவை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

நாட்டின் வன அடர்த்தியை அதிகரிப்பதற்காக அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்தும் வகையில் 2019 ஆம் ஆண்டை சுற்றாடல் பாதுகாப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன் கீழ் நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகளை நடும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி சூழல் பாதுகாப்புக்காக விரிவானதோர் பணியை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதற்கு மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பாடசாலை பிள்ளைகள் மற்றும் அனைத்துப் பிரஜைகளினதும் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இழுபடும் அரசியல் பிரச்சினை

கொழும்பில் ஏற்பட்டுள்ள பெரும் அரசியல் கொந்தளிப்பு நிலைக்கு எதிர்வரும் புதனன்று நாடாளுமன்றம் கூடும் போது தீர்வு கிட்டும் – பிரச்சினை முடிவுக்கு வரும் – என்றெல்லாம் பலரும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

ஆனால், நிலைமை அதுவல்ல என்பது தான் யதார்த்தம்.

புதன்கிழமை – 7 ஆம் திகதியன்று – நாடாளுமன்றம் கூடும் என்று நம்பப்பட்டாலும் அதற்கான அரச வர்த்தமானி அறிவிப்பு ஏதும் இன்னும் ஜனாதிபதியினால் வெளியிடப்பட வில்லை. அது வெளியாகாத வரை அன்றைய தினம் நாடாளுமன்றம் கூடுமா என்பது சந்தேகமே.

நேற்று மாலை இந்தப் பத்தி எழுதப்படும் வரை, முடக்கப்பட்ட நாடாளுமன்றம் அதற்கான அறிவிப்பில் உள்ளபடி 16 ஆம் திகதிதான் கூடும் என்ற நிலைமையே நீடித்தது.

நாளையோ, மறுதினமோ அறிவிப்பு வந்தாலும் கூட – அதனடிப்படையில் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடினாலும் கூட – தற்போதுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலைமை அன்று முடிவுக்கு வந்து, ஒரு சுமுகநிலை ஏற்பட்டு விடும் என்று நம்புவதற்கு இடமேயில்லை என்பதுதான் உண்மை.

முடக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் போது, அதனை ஆரம்பித்து வைக்கும் உரையை ஜனாதிபதி ஆற்ற வேண்டும்.

ஆனால், 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு, தன்னை ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவருமான இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார். அப்படிப் பார்த்தால் அன்று காலையில் நாடாளுமன்றம் கூடாது என்பதுதான் அதன் அர்த்தம்.

சரி, காலையில் அந்தச் சந்திப்புக்களை முடித்து விட்டு நண்பகலுக்கு பின்னர், முடக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டும் எண்ணத்தில் ஜனாதிபதி இருக்கின்றார் என்று வைத்தாலும் கூட, மாலை அமர்வில் அவரது உரை, அதற்குப் பதிலுரை என்ற அளவிலேயே அன்றைய நிகழ்வுகள் நடந்தேற வாய்ப்பும், நேரமும் இடமளிக்கும்.

நாடாளுமன்றம் முடக்கப்பட்டால் நாடாளுமன்றத்தின் உபகுழுக்களும் கூட சட்டரீதியாகக் கூடுவதற்கோ, செயற்படுவதற்கோ இயலாது. அவையும் செயலிழந்து இருக்கும். நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும்போதுதான் அவையும் மீளச் செயற்பட முடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசுக்கு எதிராக ஐ.தே.க. தரப்பு கையளித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை கூட நாடாளுமன்றம் கூடும் ஆரம்ப தினங்களில் சபையில் எடுக்கப்படுமா என்பதும் கூடக் கேள்விக்குறியாகவே உள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எப்போது நாடாளுமன்றத்தில் எடுப்பது என்பது குறித்து நாடாளுமன்ற விவகாரக் குழுவே சபாநாயகர் தலைமையில் கூடித் தீர்மானிக்க வேண்டும். புதிய அரசு உருவாகியிருப்பதால், முன்னையே நாடாளுமன்ற விவகாரக் குழுவை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முடக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்ட பின்னரே நாடாளுமன்ற விவகாரங்களுக்கான புதிய குழுவின் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அந்தக்குழுவின் கூட்டத்தைக் கூட்டமுடியும்.

அதைக்கூட்டினால்தான் அதில் மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்பதைத் தீர்மானிக்க முடியும்.

அந்தத் தீர்மானத்தின்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடந்து, அது வாக்கெடுப்புக்குவிடப்படும்போதுதான், நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய இக்கட்டு புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது தரப்புக்கும் வரும்.

அதுவரை அந்தச்சிக்கலுக்கு முகம் கொடுக்காமலேயே விடயங்களை – அரசு நடவடிக்கைகளை – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசுத் தரப்பினரும் இன்னல் ஏதுமின்றிக் கொண்டு செல்லலாம் என்பதுதான் இப்போதைய நிலைமையாகும்.

முடக்கப்பட்ட நாடாளுமன்றம், 16 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டப்பட்டாலும் கூட, நம்பிக்கை வாக்கெடுப்புப் பிரச்சினையை பிரதமர் மஹிந்தரின் அரசு உடனடியாக எதிர்கொள்ளப்போவதில்லை, அதற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கூட மேலும் தாமதமாகலாம் என்று நாடாளுமன்ற நடவடிக்கைகள், செயற்பாடுகளில் பரிச்சயமுள்ள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமைகளை நோக்கும் போது, நாடாளுமன்றம் முடக்கப்பட்ட திகதிக்கு முற்கூட்டியே கூட்டப்பட்டாலும் கூட, குதிரைப் பேரப் பேச்சுகளும், எம்.பிகளை விலைக்கு வாங்கும் வியாபாரங்களும் இன்றும் இரண்டு, மூன்று வாரங்களுக்குத் தொடரப்போகின்றன என்றே தோன்றுகின்றது. முடிவில்லா தொடராக இந்தப் 'பிஸ்னஸ்' நீடிக்கப்போகிறது.

பாவம். நமது இலங்கைத் தீவு!

# வவுனியாவில் பொலிஸ் கைது செய்த ஊடகவியலாளருக்கு விளக்கமறியல்

வவுனியா, நவ. 04

ஆவா குழுவின் துண்டுப் பிரசுரங்களை அயலவர்களுக்கு விநியோகித்தார் என்ற சந்தேகத்தில் ஊடகவியலாளர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.

வவுனியா மாவட்டத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் தினப்புயல் பத்திரிகையில் அலுவலகச் செய்தியாளர் இ.தர்சன் என்பவரையே பொலிஸார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

ஆவா குழுவின் எச்சரிக்கை என அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கடந்த மாத முற்பகுதியில் வவுனியா நகரை அண்டிய பல பகுதிகளிலும் விசிறப்பட்டிருந்தன. இதனையடுத்து அந்தப் பகுதிகளில் வவுனியா பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமையுடன், இது தொடர்பான விசாரணைகளையும் பலரிடம் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் விசாரணை ஒன்றுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு ஊடகவியலாளர் இ.தர்சன் என்பவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் மாலை அவர் அங்கு சென்றபோது பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் அவரைக் கைது செய்தனர்.

அத்துடன், ஆவா குழு என்ற பெயரில் வீசப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்கள் தொடர்பாக அவரின் இல்லத்திலும் சோதனைகளை மேற்கொண்டனர்.

அதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்திருந்து நேற்று மாலை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக ஊடகவியலாளரை எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டமையை அறிந்து வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் இணைய ஊடகவியலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ. மயூரன் ஆகியோர் வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள ஊடகவியலாளரை சந்திப்பதற்கு அனுமதி கோரியபோதும் பொலிஸாரினால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள வீதிகளில் விசிறப்பட்டிருந்த ஆவா குழுவின் துண்டுப் பிரசுரங்களைச் செய்திக்காக எடுத்துச் சென்றார் என்றும், இதனை அவர் அயலவர்களிடம் காண்பித்தார் எனவும் கூறப்படுகின்றது. (ஐ-100)

## அட்மிரல் விஜேகுணரத்ன விவகாரம்

# நீதிமன்ற உத்தரவினால் மைத்திரிக்கு நெருக்கடி

கொழும்பு, நவ. 04

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு, கோட்டே நீதிவான் ரங்க திசநாயக்க நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் முக்கிய சந்தேகநபரை தப்பிக்க உதவினார் என்று அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் கூறியிருந்தது.

இதையடுத்து, அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோட்டே பிரதம நீதிவான் பணித்திருந்தார்.

எனினும், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்குத் தடையை ஏற்படுத்தி வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கைது செய்து அவரது வாக்குமூலத்தைப் பெற நடவடிக்கை எடுக்காதது ஏன் என்றும், அதனை தடுப்பது என்ன என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியிடம் நீதிவான் கேள்வி எழுப்பினார்.

இதன் போது, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்ய முற்பட்ட போது தமக்கு பல்வேறு தரப்புகளில் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

அப்போது நீதிவான், குற்றப் புலனாய்வுப் பிரிவு மீது எந்தவொரு அழுத்தம் அல்லது தலையீடு இருந்தால், அது பற்றி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.


விசாரணையை பக்கச்சார்பின்றி முன்னெடுப்பதற்கு சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்த நீதிமன்றம் தயாராக இருப்பதாகவும், எல்லா குடிமக்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என்பது மாத்திரமன்றி, சட்டத்தின் முன்பாக எல்லாக் குடிமக்களும் சமமானவர்கள் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கும்போது சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், அட்மிரல் ரவீந்திர குணரத்னவைக் கைது செய்ய விடாமல் தடுத்து வந்த ஜனாதிபதி கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்.

பொலிஸ்துறையைக் கட்டுப்படுத்தும், சட்டம்–ஒழுங்கு அமைச்சையும் அவரே கைவசம் வைத்திருக்கும் நிலையில், பாதுகாப்பு அமைச்சராக, அட்மிரல் குணரத்னவைப் பாதுகாப்பதா – சட்டம் ஒழுங்கு அமைச்சராக அவரைக் கைது செய்யும் நடவடிக்கை எடுப்பதா – என்ற குழப்பம் இலங்கை அதிபருக்கு ஏற்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் புருசோத்தமனின் நினைவு



யாழ்ப்பாணம், நவ.04

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கடந்த வியாழக்கிழமை நினைவு கூர்ந்தனர்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்றும் தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்"

-கிரேக்க பழமொழி

## நாளை

05.11.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம்: அத்தம் மு.இ. 9.13 வரை
திதி: திரயோதசி மு.இ. 11.55 வரை
சுபநேரம்: 12.04 – 1.34 வரை
இராகுகாலம்: 7.34 – 9.04 வரை

# நாடாளுமன்றைக் கூட்ட வலியுறுத்தி தினமும் கவனவீர்ப்புப் போராட்டம்

## கொழும்பில் பொது அமைப்புகள் நடத்துகின்றன




கொழும்பு, நவ. 03

**முடக்கி வைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டுமனக் கோரி கொழும்பு நகரில் பொது அமைப்புகளைச் சேர்ந்தோர் தினம்தோறும் கூடிப் பதாகைகளைப் பிடித்தபடி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.**

**கொழும்பு நகரின் கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சதுக்கத்தில் தினமும் மாலையில் 4.30 மணியிலிருந்து ஆறு மணிவரை இருபாலருமாக சுமார் 50 பேர் வரை இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.**

“கடந்த செவ்வாய்க்கிழமையன்று ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் நடத்திய மிகப் பெரிய ஊர்வலத்தில் கலந்துகொண்டோம். அதற்குப் பிறகு பொதுமக்களில் சிலர் கூடி, ஜனநாயக வழியில், எந்தக் கட்சிச் சார்பும் இன்றித் தொடர் போராட்டத்தை நடத்துவது என முடிவுசெய்தோம். முதல்நாள்சுமார் 300 பேர் வரை இந்தச் சதுக்கத்தில் கூடினோம். பிறகுதினமும் 50–60 பேர்கூடுகிறார்கள்.” –என்கிறார் இந்தப்போராட்டத்தில் முதல்நாளிலிருந்து கலந்து கொண்டுவரும் ட்ரேசி ஹொல்சிங்கர்.

சிலர் கைக்குழந்தைகள் உட்பட குடும்பத்தினருடன் வந்து கலந்துகொள்கின்றனர். ஆண்களை விடப் பெரும் எண்ணிக்கையில் பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வது கவனிக்கத் தக்கதாக இருக்கிறது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள இவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் மட்டுமே அழைப்பு விடுக்கின்றனர். அதைப் பார்த்தே பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

இந்தப் போராட்டம் யாருக்கும் ஆதரவானது அல்ல. ஜனநாயக வழிமுறைகளை மீட்பதற்காக மட்டுமே நாங்களை இதனை நடத்துகிறோம் என்கிறார் இதில் பங்கேற்ற சுபா விஜேஶ்ரீவர்தன.

இலங்கையில் குறிப்பிடத்தக்க பத்திரிகையாளராக இருந்த லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்ட போது, இதேபோல பதாகைகளை ஏந்தியும் மெழுகுவர்த்திகளை ஏந்தியும் நடத்திய போராட்டம் அரசுக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுத்தது என்பதைச் சுட்டிக்காட்டும் இவர்கள், அதேபோன்ற ஓர் அழுத்தத்தைக் கொடுப்பதே தங்களது விருப்பம் என்கிறார்கள் .

நாடாளுமன்றம் கூட்டப்படும்வரை இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்போவதாக இவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# இந்தியாவை ஒதுக்கிவிட்டு சீனாவுடன் சேரமாட்டோம்

## சரத் அமுனுகம திட்டவட்டம்



இந்தியாவைப் புறக்கணித்து விட்டுச் சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணமாட்டோம் என்று இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உட்கட்டமைப்பு திட்டங்களை முன்னெடுத்தமைக்காக , இலங்கை சீனாவை நோக்கி நகராது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையைப் பொறுத்தவரை இரு மிகப்பெரும் நண்பர்களை கொண்டிருப்பதைச் சாதகமான விடயமாகக் கருதுகின்றது. இலங்கை ஒரு பக்கம் சாய்வதில் பலனில்லை. இந்தியாவுடன் நட்பாக உள்ளோம் என்பதற்காகச் சீனாவுடன் சிறந்த உறவைப் பேணவில்லை எனக்கருத முடியாது.

சீனாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் விதிமுறைகள் மிகவும் சாதகமானவையாக காணப்பட்டன. அதிகாரத்துவ நடைமுறைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகளின் உதவியுடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதை விடச் சீனாவின் உதவியுடன் மிகவேகமாக திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். சீனாவிடமிருந்து கடன்களை பெறுவதில் பிரச்சினைகள், குறைபாடுகள் உள்ளபோதிலும் ஒட்டுமொத்தத்தில் சீனாவிடமிருந்து உதவியைப் பெறுவது சிறந்த மூலோபாய முடிவு என நான் கருதுகின்றேன் – என்றார். (ஐ)

# உணவுப் பொதியின் விலை குறைவடையும்

கொழும்பு, நவ. 04

அத்தியவசியப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளமை காரணமாக உணவுப்பொதி ஒன்றின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைச் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அனைத்து உணவகங்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தியவசியப் பொருள்களின் விலைகள் குறைவடைந்ததன் நன்மையை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், ஒரு கிலோ கிராம் பருப்பின் மீதான விசேட வர்த்தக வரி 5 ரூபாவாலும், ஒரு கிலோ கிராம் கடலை மீதான வரி 5 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் உழுந்தின் மீதான வரி 25 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலஞ்சம் வழங்கியிருந்தால் பொலிஸில் முறையிடுங்கள்

## மஹிந்தானந்த கூறுகின்றார்



அரசு, ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவுக்கு லஞ்சம் வழங்கித் தமது பக்கம் அழைக்க முயன்றமை உண்மையென்றால் பொலிஸில் முறைப்பாடு செய்து இணக்கம் கண்டிருக்கலாமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமர் மஹிந்த தமது பெரும்பான்மையை அதிகரிப்பதற்காக ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பணம் வழங்கித் தன் பக்கம் இணைத்து வரும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார் என ஐக்கிய தேசிய கட்சி பகிரங்கமாகக் குற்றம்சாட்டி வருகின்றது.

அந்தவகையில் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார, மஹிந்த தன்னுடன் இணைவதற்குப் பணம் வழங்குகிறார் என்று கூறினார் எனச் சபாநாயகரிடம் நேற்று முன்தினம் முறையிட்டிருந்தார். இந்நிலையில் அவரின் முறைப்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மஹிந்தானந்த அளுத்கமகே இதனைக் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் பாலித ரங்கே பண்டார கூறியதில் உண்மை இருக்குமாயின் சட்ட ரீதியாக பொலிஸில் புகார் ஒன்றைப் பதிவு செய்து வழக்கு தொடரவேண்டியது தானே என அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

# பஸ் கட்டணம் குறைகிறது

கொழும்பு, நவ. 04

எரிபொருளின் விலை குறைவடைந்துள்ளமை காரணமாக பஸ் கட்டணத்தை 2 வீதத்தால் குறைப்பதற்குத் தனியார் பஸ் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்ஜித் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருளின் விலை குறைப்புக்கமைய பஸ் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடித் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை, பஸ் கட்டணத் திருத்தம் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் தீர்மானமொன்றை எட்டவுள்ளதாக அனைத்து மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் விஜிதகுமார தெரிவித்தார்.

கடந்த வியாழன் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், 92 ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவினாலும் ஒரு லீற்றர் டீசலின் விலை 7 ரூபாவினாலும் குறைக்கப்பட்டதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படேலின் சிலையைத் தொடர்ந்து 151 மீட்டர் உயரத்தில் ராமர் சிலை

## அயோத்தி சரயூ நதிக்கரையில்

குஜராத்தில் 182 மீட்டர் உயரத்தில் பிரம்மாண்டமான சர்தார் வல்லபாய் படேல் சிலை திறக்கப்பட்டுள்ள நிலையில் அயோத்தியில் சரயு நதிக்கரையில் 151 மீட்டர் உயரத்தில் ராமர் சிலையை நிறுவ அம்மாநில பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் 'இரும்பு மனிதர்' என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய் படேலுக்கு குஜராத் மாநிலத்தில் நர்மதா ஆற்றின் சர்தார் சரோவர் அணைக்கு அருகே, ஆற்றுத் தீவான சாதுபேட் என்ற இடத்தில் சிலை நிறுவப்பட்டுள்ளது.

'ஒற்றுமையின் சிலை' என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ள இந்தச் சிலை 182 மீட்டர் உயரமுள்ளது. உலகிலேயே மிக உயரமான இந்தச் சிலையை பிரதமர் மோடி சிலதினங்களுக்கு முன்புதிறந்துவைத்தார்.

இதுபோலவே மும்பை அருகே கடலில் மராட்டிய மன்னர் வீர சிவாஜியின் பிரமாண்ட சிலை தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தில், அயோத்தியில் பிரம்மாண்ட ராமர் சிலை அமைக்க அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் முடிவு செய்துள்ளார்.

இதுகுறித்து பா.ஜ.க. மூத்த தலைவரும், அயோத்தி மேயருமான ரிகேஷ் உபாத்யாயா கூறுகையில் "அயோத்தியில் சரயு நதிக்கரையில் 151 மீட்டர் உயரத்தில் இந்த சிலை அமைக்கப்படுகிறது. இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. ராமர் சிலை அமைக்கப்பட்டால் அது சுற்றுலா பயணிகளை பெருமளவு ஈர்க்கும் என உத்தரப் பிரதேசமாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதற்கான அறிவிப்பு தீபாவளி அன்று வெளியிடப்படும்" – என்றார்.

# மியாமியில் தற்கொலைத் தாக்குதல் நடத்த உ.பியிலிருந்து மிரட்டிய இளைஞர் கைது!






லக்னோ,நவ.04

அமெரிக்காவில் உள்ள மியாமி விமான நிலையம் மீது தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்போவதாக தொலைபேசியில் மிரட்டிய வாலிபரை உத்தரப்பிரதேசம் மாநிலப் பொலிஸார் கைது செய்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தை சேர்ந்த 18 வயது வாலிபர் ஒருவர் தடை செய்யப்பட்ட மாயப்பணமான பிட்கொயின்களை வாங்கிச் சேமித்து வைக்க ஆசைப்பட்டார். இதற்காக இணையத்தளம் மூலம் அமெரிக்காவை சேர்ந்த ஒருவரிடம் ஆயிரம் டொலர்களைக் கொடுத்து ஏமாந்தார்.

இது தொடர்பாக அமெரிக்கப் புலனாய்வு முகாமையான எவ்.பி.ஐ.யிடம் இந்தியாவில் இருந்தவாறு முறைப்பாடு அளித்தார். இவரது முறைப்பாடு மீது அங்குள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் அந்த வாலிபர் ஆத்திரம் அடைந்தார்.

பின்னர், கடந்த மாதம் 2 ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதி வரை அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள விமான நிலையத்தை வெடி வைத்துத் தகர்க்கப் போவதாகவும், உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிவந்து ஏ.கே.47 ரக துப்பாக்கியால் மியாமி விமான நிலையத்தில் அனைவரையும் சுட்டுக் கொல்லப் போவதாகவும் மாறிமாறி மிரட்டி வந்துள்ளார்.

அமெரிக்க அதிகாரிகள் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த வாலிபரின் கைபேசியை மோப்பம் பிடித்த உத்தரப்பிரதேசம் மாநில பொலிஸார் மிரட்டல் விடுத்த வாலிபரை மடக்கிப் பிடித்து, கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# ரஜினி நடித்த '2.0' படத்தின் 4டி டிரைலர் நேற்று வெளியீடு




சென்னை, நவ.04

ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார் நடிப்பில் உருவாகி இருக்கும் '2.0' படத்தின் டிரைலர் வெளியீட்டு விழாவில் படத்தின் 4டி டிரைலரை படக்குழு வெளியிட்டது.

ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், ஏமி ஜாக்சன் நடிப்பில் பெரும் பொருட்செலவில் உருவாகி இருக்கும் படம் '2.0'. ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்துள்ளார். 'எந்திரன்' படத்தின் இரண்டாம் பாகமாக இது உருவாகி இருக்கிறது.

இதுவரை இந்திய படங்களில் இல்லாத அளவுக்கு கிராபிக்ஸ் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக நடைபெற்று வந்த கிராபிக்ஸ் பணிகளுக்காக மட்டும் இந்தியப் பணத்தில் கிட்டத்தட்ட 543 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த படத்தின் டிரைலர் வெளியீடு மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஆர்.ஜே.பாலாஜி தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது படத்தின் 4டி டிரைலரை படக்குழு ஒளிபரப்பியது. 3டி கண்ணாடி மூலம் அரங்கில் இருந்த அனைவரும் இந்த டிரைலரைக் கண்டுகளித்தனர்.

2.0 படத்தில் வில்லனாக நடித்த நடிகர் அக்ஷய் குமார், இயக்குனர் சங்கர் ஆகியோர் நடிகர் ரஜினிக்கு பாராட்டு தெரிவித்தனர்.

# மகாராஷ்டிராவில் ஆள்கொல்லிப் புலி சுட்டுக் கொல்லப்பட்டது



மகாராஷ்டிராவில் ஆள்கொல்லிப் புலி ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டது.

அடர்ந்த வனப்பகுதியில் வாழும் புலி எப்போதாவது கிராமத்துக்குள் வந்து ஆடு, கோழி, மாடு போன்றவற்றை அடித்துக் கொல்வது வழக்கம். இதுபோன்ற புலி சில சமயங்களில் மனிதர்களைக் கொல்வது அரிதான சம்பவம். அவ்வாறு மனிதர்களை புலி கொன்று விட்டால் தொடர்ந்து அது மனித வேட்டையாடுவதை வாடிக்கையாக வைத்து விடும்.

எனவே மனித உடலை ருசித்த புலிகளை உடனடியாக கொன்று விடுவதை வனத்துறை வழக்கமாக கொண்டுள்ளனர். உத்தரகண்ட் தொடங்கி தமிழகம் வரை 'மேன் ஈட்டர்' எனப்படும் ஆள்கொல்லி புலிகள் வேட்டையாடப்பட்டுள்ளன. தமிழக – கர்நாடக எல்லை பகுதியிலும் முன்பு ஆள்கொல்லி புலிகள் கொல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் யவாடாமால் மாவட்டத்தில் உள்ள பந்தர்காவாடா வனப்பகுதியில் பெண் புலி ஒன்று ஆள்கொல்லியாக மாறியுள்ளது. ஆவ்னி எனப் பெயரிடப்பட்ட இந்தப் பெண் புலி 13 பேரை வேட்டையாடியுள்ளது. இதனால் கிராமப்புறங்களில் அச்சம் நிலவியது. 13 மனிதர்களைக் கொன்று அவர்கள் உடலை ருசித்த இந்தப் புலியை கொல்ல வேண்டும் எனப் பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர். இதையடுத்து ஆவ்னி புலியை கொல்ல வனத்துறை முடிவு செய்தது. அந்தப் புலிக்கு இரண்டு குட்டிகளும் உள்ளன. தாய்ப்புலி ஆள்கொல்லியாக மாறியதால் மனித மாமிசத்தைத் தனது குட்டிகளுக்கும் கொடுத்திருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்தது. இதனால் தாயையும், மூன்று குட்டிகளையும் கொல்ல வனத்துறை முடிவு செய்தது. ஆனால் இதற்கு உயிரின ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் சமூகவலைதளங்களில் நடந்தன. அந்தப் புலியைக் கொல்ல வேண்டும் என வனப்பகுதி கிராம மக்கள் வலியுறுத்தினர். புலிக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. ஆனால் ஆவ்னி புலியைக் கொல்லக்கூடாது எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. பின்னர் உச்ச நீதிமன்றம் புலியை உயிருடன் பிடிக்க உத்தரவிட்டது.

ஆவ்னி புலியை தேடி 3 மாதங்களாக ட்ரோன் கமரா மற்றும் நவீன கருவிகளுடன் அந்த வனப்பகுதியில் வனத்துறையினர் முகாமிட்டு இருந்தனர். புலியை உயிருடன் பிடிக்க முயன்று வருவதாகக் கூறினர். இந்நிலையில் ஆவ்னி புலி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு அடர்ந்த வனப்பகுதியில் அந்த புலியை சுட்டுக் கொன்றனர். எனினும், இரண்டு குட்டிகள் குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. ஆவ்னி புலி கொல்லப்பட்டது பற்றி வனத்துறையினர் எந்த விரிவான தகவலை வெளியிட வில்லை. இந்த தகவல் வெளியானதும் வனப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.



பட்டாசு வெடித்துக் கொண்டாட்டம்

# பொருளாதாரத் தடைகளை நீக்காவிட்டால் மீள அணு ஆயுதப் பாதைக்கு வட கொரியா!

## அந்த நாடு அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

பியாங்யாங், நவ.04

தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்காவிட்டால் மீண்டும் அணு ஆயுதப் பாதைக்குச் செல்வோம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

சிங்கப்பூரில் கடந்த ஜூன் மாதம் 12 ஆம்திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வடகொரியா அதிபர் கிம் ஜாங் அன் ஆகியோர் சந்தித்துப் பேசினர். உலக மெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தப் பேச்சின்போது, கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிட வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் சம்மதம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமெரிக்காவுடன் அவர் ஓர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். அதைத்தொடர்ந்து பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும், வட கொரியா அணுகுண்டு சோதனையோ, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையோ நடத்தவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் டிரம்பை மீண்டும் சந்தித்து பேச விருப்பம் தெரிவித்து கிம் ஜாங் அன் கடிதம் எழுதினார். அதன் எதிரொலியாக அமெரிக்க பாதுகாப்புத் துறை மந்திரி மைக் பாம்ப்பியோ வடகொரியாவுக்கு வந்து கிம் ஜாங் அன்னை சந்தித்து பேசினார். விரைவில் இரண்டாவது முறையாக இருநாட்டு தலைவர்களும் சந்தித்துப்பேசுவார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அமெரிக்கா அரசு முன்னர் உறுதியளித்ததைப்போல வடகொரியாவின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை எதுவும் இன்னும் விலக்கப்படவில்லை.

இந்நிலையில், அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாவிட்டால் தங்கள் நாட்டின் 'பியாங்ஜின்' (pyongjin) கொள்கைப்படி அணு ஆயுத பலத்தை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு திரும்பப் போவதாக வட கொரியா எச்சரித்துள்ளது.



# ஈரான் மீது 2ஆம் கட்டத் தடைகளை அறிவித்தார் அமெ. ஜனாதிபதி டிரம்ப்



2015ஆம் ஆண்டு ஈரானுடன் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ், ஈரான் மீதான சர்வதேச தடைகள் நீக்கப்பட்டன. அதிலிருந்து வெளியேறுவதாக கடந்த மே மாதம் அறிவித்த டிரம்ப் நிர்வாகம், ஈரான் மீது மீண்டும் தடைகளை விதித்தது.

தற்போது இரண்டாம் கட்ட தடைகளை டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஈரானின் எண்ணெய் மற்றும் கப்பல் துறை, அதன் மத்திய வங்கி உள்ளிட்டவற்றில் சிக்கல்களை ஏற்படுத்தும் விதமாக இந்தத் தடைகள் அமையும்.

கடந்த மே மாதம் விதிக்கப்பட்ட முதல் கட்ட பொருளாதார தடைகளின்படி, அமெரிக்க டொலர்களை வாங்குவதில் ஈரானுக்கு கட்டுப்பாடு, தங்கம் மற்றும் விலையுயர்ந்த உலோக வர்த்தகம் மற்றும் வாகன துறையில் வர்த்தகத்தில் ஈடுபடுவதில் ஈரானுக்கு சிக்கல் ஏற்படும்.

இருந்தபோதிலும், ஈரானில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யும் எட்டு நாடுகளை அமெரிக்கா தண்டிக்கவில்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு இஸ்லாமிய குடியரசு நாடான ஈரான் மீதான சர்வதேச தடைகள் நீக்கப்பட்டு நிவாரணம் பெறுவதற்காக சர்ச்சைக்குரிய அணுசக்தி செயல்பாடுகளில், கட்டுப்பாடுகளை கடைபிடிக்க ஒப்புக்கொண்டது.

ஆனால் டிரம்ப் நிர்வாகமானது "ஈரான் அணுகுண்டு தயாரிப்பதற்கான அனைத்து வழிகளையும் மூடுவதற்கான அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றத் தவறிவிட்டது" எனக் கூறியது.

தெஹ்ரானின் பெலிஸ்டிக் ஏவுகணை திட்டம் மற்றும் பயங்கரவாதத்துக்கான அதன் ஆதரவு உள்ளிட்ட தீய செயல்களுக்கு, அமெரிக்கா ஒப்பந்தம் என்ற பேரில் ஒத்துப்போகாது என்றது.

ஈரானை ஒப்பந்தத்தை முழுமையாக பின்பற்ற வைக்க வலியுறுத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்க அதிபர் மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்தார்.

உடன்படிக்கையை முழுமையாக செயல்படுத்துவதற்காக, ஈரான் தனது கடப்பாடுகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என இந்த உடன்படிக்கையில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட பிற நாடுகள் வலியுறுத்தியிருந்தன.

# பாக். புதிய அதிபர் இம்ரான் சீன அதிபருடன் சந்திப்பு



பெய்ஜிங்,நவ.4

சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், அந்நாட்டு அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்து நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக தேர்வானவர் தெரிக் இ இன்சாப் கட்சியின் தலைவரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான்.

இவர் அரசுமுறை பயணமாக நான்கு நாள்கள் சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை பெய்ஜிங் சென்றடைந்த இம்ரான் கானுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, தியானன்மென் சதுக்கத்தில் அமைந்துள்ள அரசு அரங்கில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை இம்ரான் கான் சந்தித்து பேச்சு நடத்தினார்.

சீனா மற்றும் பாகிஸ்தான் இடையிலான உறவை மேம்படுத்துவதற்கு இந்த சுற்றுப்பயணம் உதவும். இதன்மூலம் இருதரப்பு உறவில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகும் என இருநாட்டு அதிகாரிகளும் தெரிவித்தனர்

பாகிஸ்தான் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள இம்ரான் கானின் இந்த சீனப் பயணம் அவரது முதல் வெளிநாட்டு பயணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசிய விமானத்தின் சிதைவுகளை மீட்கும் பணியில் நீர்மூழ்கி வீரர் ஒருவர் சாவு

ஜகார்த்தா, நவ.04

இந்தோனேசியாவில் கடந்த திங்கள் கிழமை விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைவுகளை மீட்கும் பணியில் ஈடுபட்ட நீர்மூழ்கி வீரர் பலியானார்.

இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து சுமத்ரா தீவில் உள்ள பங்கால் பினாங்கு நகருக்குக் கடந்ததிங்கள் கிழமை காலை 6.20 மணிக்கு 'லயன் ஏர்' பயணிகள் விமானம் புறப்பட்டு சென்றது. 13 ஆவது நிமிடத்தில் அந்த விமானம் திடீரென மாயமாகி கடலில் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் பயணம் செய்த 189 பேரும் உயிரிழந்தனர். அவர்களில் 2 கைக் குழந்தைகள் மற்றும் இந்திய விமானி கப்டன் பவ்வி சுனேஜா உள்ளிட்ட மற்றொரு விமானியும் அடங்குவர்.

விபத்து உறுதி செய்யப்பட்டதும் விமானம் விழுந்த பகுதிக்கு மீட்பு படைகள் விரைந்தன. ஜாவா கடல் பகுதியில் அந்த விமானத்தின் பல்வேறு பாகங்கள் மிதந்தபடி இருந்ததை மீட்பு குழுவினர் கண்டுபிடித்தனர்.



இதையடுத்து, தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. விமான விபத்தில் இறந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

விமானம் கடலுக்குள் 98 முதல் 115 அடி (30-35 மீட்டர்) ஆழத்தில் மூழ்கி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனவே கடலுக்குள் மூழ்கி கிடக்கும் விமானப் பாகங்கள் மற்றும் பயணிகள் உடல்களைத் தேடும் பணியில் சிறப்பு பயிற்சி பெற்ற 30 நீர்மூழ்கி வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ரோபோவும் (எந்திர மனிதன்) கடலுக்குள் இறக்கப்பட்டு தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மீட்பு பணியில் ஈடுபட்டு இருந்த நீர் மூழ்கி வீரர் சியாக்ருல் ஆண்டோ (வயது 48) துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார். அழுத்தக் குறைவு காரணமாக ஆண்டோ உயிர் இழந்து இருக்க கூடும் என்று கூறப்படுகிறது. அண்மையில், இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போதும், மீட்பு பணிகளில் ஆண்டோ ஈடுபட்டு இருந்தார். அதேபோல், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஏர் ஆசியா விமானம் விபத்துக்கு பிறகு நடைபெற்ற மீட்பு பணியிலும், ஆண்டோ ஈடுபட்டு இருந்தார்.

## பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் 25ஆம் ஆண்டில்

இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகம் பிரான்ஸ் 2019 ஆம் ஆண்டு தனது 25ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இதன் ஆரம்பத் திருப்பலியை 28 ஒக்டோபர் 2018 அன்று அமல மரித்தியாகிகளின் வடமாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அடிகளார் பாரீஸ் கொங்கூர் சூசையப்பர் ஆலயத்தில் நிகழ்த்தினார் என பணியக திருவாளர் சில்லெஸ்ரர் தம்பிராசா தெரிவிக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ஞபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## 'தாத்தா பிரான்சிஸ்' என அழைத்தது மகிழ்வு

பிலிப்பீன்ஸ் நாட்டில் இளையோரும் குழந்தைகளும் 'தாத்தா பிரான்சிஸ்ஸை' என்று அழைத்தமை எனக்கு மகிழ்வை தந்தது. முதியோரை ஒதுக்கி வைப்பது இளையோரின் தவறு. முதியோர் பலர் இளையோரைப் புரிந்துகொள்ளாமல் கண்டனம் செய்வதும் தவறு. முதியோரின் அனுபவம் மற்றும் ஞானம் இளையோரின் கனவுகள் மற்றும் ஆர்வம் இணையும்போது நல்லதொரு உலகம் உருவாகும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# இரணைதீவு ஆலயத்தை திறந்து வைத்தார் யாழ். ஆயர்





26 ஆண்டுகளின் பின்னர் குடியேறிய இரணைதீவு மக்களின் செபமாலை அன்னை ஆலயத்தை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 27 ஒக்ரோபர் 2018 அன்று திறந்து வைத்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றத்திற்கான போராட்டம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகியது. மன்னாரில் இருந்து வெள்ளாங்குளம், முழங்காவில், பூநகரி ஆகிய பிரதேசங்களின் ஊடாக சங்குப்பிட்டி, கேரதீவு வழியாக கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரத்தில், யாழ்ப்பாணத்திற்குச் செல்கின்ற ஏ 32 பிரதான வீதிக்கருகில் உள்ள இரணைமாதா நகர் என்ற கிராமத்தில் இந்தப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்திருந்தார்கள்.

யுத்த மோதல்கள் காரணமாக 1992 ஆம் ஆண்டு இவர்கள் இடம்பெயர்ந்தனர். இரணைதீவில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்றதையடுத்து, அங்கு கடற்படையினர் நிலைகொண்டனர். யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து 2009 ஆம் ஆண்டு செட்டம்பர் மாதம் ஆரம்பமாகிய மீள்குடியேற்ற நடவடிக்கைகளின்போது இந்த மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை. மாறாக இங்கு நிலைகொண்டிருந்த கடற்படையினர் இடம்பெயர்ந்த மக்கள் இரணைதீவுக்குள் செல்வதை முற்றாகத் தடை செய்திருந்தார்கள். இந்த மக்களின் சுயஎழுச்சிப் போராட்டத்திற்கு அருட்தந்தையர்களுடன் ஆலயப் பங்கு நிர்வாகமும் வேறு சில பொது அமைப்புக்களும் துணை புரிந்தன. இருந்த போதிலும் ஒரு வருடத்தை எட்டியுள்ள தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்காக தமது போராட்டத்தின் 359 ஆவது நாளாகிய ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி சுமார் 50 படகுகளில் ஏறிய அந்த மக்கள் வெள்ளைக் கொடிகளை ஏந்திய வண்ணம் இரணைதீவில் சென்று இறங்கினார்கள். அவர்களுடன் அருட்தந்தையர்கள், அருட்கோதரிகள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர் எனப் பலதரப்பட்டவர்களும் சென்றிருந்தார்கள்.

## உண்மையின் எண்ணங்கள்

### இரணைதீவு மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய யாழ் ஆயர்

26 ஆண்டுகளின் பின்னர் இரணைதீவு மக்களின் குடியேறியுள்ளனர். அவர்களுக்கு செபமாலை அன்னை ஆலயத்தை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் திறந்து வைத்தார் என்பது மகிழ்வான செய்தியாகும். நீண்டகாலமாக போராட்டத்தில் இருந்த இரணைதீவு மக்களின் வாழ்வில் ஒளியேற்பட யாழ் ஆயர் ஆற்றிய பணி சிறப்பானது. ''பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்.'' (எரேமியா 1:10) என்ற வசனங்களுக்கு சான்று பகரும் வகையில் மக்களின் போராட்டத்தோடு இணைந்து நின்று யாழ் ஆயர் ஆற்றி பணியை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வெகுவாகப் பாராட்டி நிற்கிறது.

# அதிகாரத்தில் இருப்பது முக்கியமல்ல மக்களுக்கு சேவை செய்வதே முக்கியம்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை

இலங்கை நாட்டில் தோன்றியுள்ள இன்றைய அசாதாரண நிலை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது அதன் தலைவர் பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் செயலாளர் நாயகம் சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை ஆகியோர் ஒப்பமிட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அது பின்வருமாறு சொல்கிறது:-

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது நாட்டில் தோன்றியுள்ள இன்றைய அசாதாரண நிலை குறித்துக் கரிசனை கொண்டுள்ளது. நாட்டில் ஸ்திரத்தன்மை இல்லாவிட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது பொது மக்களே என்பதை எல்லோரும் மனதிருத்திக் கொள்ள வேண்டும். எனவே, எல்லா அரசியற் கட்சிகளும் தமது சுய விருப்பு வெறுப்புக்களை விடுத்து இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பிற்கு கட்டுப்பட்டு இலங்கையின் இன்றைய பிரச்சினையை தீர்க்க முன்வரவேண்டும்.

எமது நாடு சொல்லெண்ணா துன்பங்களை அனுபவித்து அளவுக்கதிகமான இரத்தத்தை சிந்தியுள்ளது. நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் நிதானத்துடனும் கவனத்துடனும் செயற்படும் படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம். இந்தக் குழப்பமான தருணத்தில் எந்த முடிவுகளை எடுத்தாலும் அங்கு அரசியல் யாப்பை பிரமாணிக்கமாக பின்பற்றிய சட்ட ஒழுங்கும் ஜனநாயக வரம்பும் மேலோங்கி நிற்க வேண்டும்.

அதிகாரத்தில் இருப்பதோ அதிகாரத்திற்கு வருவதோ இங்கு முக்கியமல்ல. மாறாக மக்களுக்கு சேவையாற்றுவதும் நாட்டை கட்டி எழுப்புவதுமே இங்கு முக்கியமானது. மக்களிடம் இருக்கும் ஆற்றல்களை உணர்ந்து நாட்டின் முலதனங்களை அறிந்து, எமது அன்புக்குரிய தாய் மண்ணின் எல்லா வளங்களையும் பயன்படுத்தி, இது மேற்கொள்ளப்பட வேண்டும். ஞானமும் நேர்மையும் மேலோங்கி இருக்க செபிக்கிறோம். இறைவன் இலங்கையை ஆசீர்வதிப்பாராக. - என்று உள்ளது.

# பிரதமர் மஹிந்த பேராயர் சந்திப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 31 ஒகஸ்ட் அன்று கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்தார். பிரதமருக்கும் பேராயருக்கு மிடையில் சுமூகமான உரையாடல் இடம்பெற்றதென்று பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் படம் இதுவாகும். புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் பேரா யரை பிரதமர் சந்தித்த இந்த நிகழ்வில் துணை ஆயர் மக்ஸ்வல் சில்வா ஆண்டகை, அந்தோனி ஜயக்கொடி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் களும் கலந்துகொண்டனர்.

# தீபாவளிக் கொண்டாட்டங்களினால் அமைதியும் மகிழ்வும் பெருக வேண்டும்

## திருப்பீட அவை வாழ்த்துச் செய்தி

தீபாவளித் திருநாள் கொண்டாடப்படும் வேளையில் நட்பும் உடன்பிறந்த உணர்வும் இக்கொண்டாட்டத்தில் நிறைய வேண்டும் என்றும் இவ்விழாவைக் கொண்டாடும் அனைத்து குடும்பங்களிலும் அமைதியும், மகிழ்வும் பெருகவேண்டும் என்றும், திருப்பீடம் தன் வாழ்த்துக்களை வெளியிட்டுள்ளது. செவ்வாயன்று கொண்டாடப்படவிருக்கும் தீபாவளித் திருநாளையொட்டி பல்சமய உரையாடல் திருப்பீட அவையின் சார்பில் செயலர் ஆயர் மைக்கல் ஏஞ்சல் ஆனடகை 31 ஒக்டோபர் 2018 அன்று இத்தீபாவளி வாழ்த்து செய்தியை வெளியிட்டுள்ளார்.

'கிறிஸ்தவர்களும் இந்துக்களும் - காயப்படக்கூடிய சமுதாயத்தைப் பாதுகாக்க' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இச்செய்தியில் வறியோர், வியாதியுற்றோர், வயதில் முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், புலம் பெயர்ந்தோர் என இன்றைய உலகில் காயப்படக்கூடிய மக்களின் எண்ணிக்கை கூடி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது.

வலுவிழந்த இம்மக்களுக்கென கிறிஸ்தவர்களும் இந்துக்களும் பல்வேறு நற்பணிகளை ஆற்றிவருகின்றனர் என்பதில் ஐயம் ஏதுமில்லை என்றாலும் வலுவிழந்தோர் எண்ணிக்கையில் பெருகி வரும் இன்றைய சூழலில் நமது நற்பணி முயற்சிகளும் தீவிரமடைய வேண்டும் என இச்செய்தியில் அழைப்பு விடப்பட்டுள்ளது.

வறியோரின் இரண்டாவது உலக நாள் 18 நவம்பர் 2018 அன்று சிறப்பிக்கப்பட விருப்பதையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் காயமடையக்கூடிய இச்சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தங்களை வரவேற்க இதயங்களை திறக்கும் மக்களைக் காணும் போது நிம்மதியும் மகிழ்வும் அடைகின்றனர் என்று கூறியுள்ள சொற்கள் இச்செய்தியில் இடம்பெற்றுள்ளன.

சமுதாயத்தில் யாரும் வெறுத்து ஒதுக்கப்படக் கூடாது என்று சிந்திக்கும் வேளையில் நம் குடும்பங்களிலும் உறவுகளிலும் யாரும் இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளனரா என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் இச்செய்தி அழைப்பு விடுக்கிறது.

அவரவர் தங்கள் சமயங்கள் காட்டும் ஆன்மீக பாரம்பரியங்களில் ஊன்றி நின்று நல்மனம் கொண்ட அனைத்து மக்களோடும் இணைந்து நாம் வாழும் இன்றைய உலகையும் வருங்காலத்தையும் மகிழ்விலும் நம்பிக்கையிலும் நிறைப்போம் என்ற விண்ணப்பத்துடன் இத்தீபாவளிச் செய்தியை நிறைவு பெறுகிறது.

## யாழ். மாநகர சபை அமர்வில் பங்கேற்க இடைக்காலத் தடை

# மணிவண்ணனின் மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றில் விசாரணைக்கு வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ். மாநகர சபை அமர்வில் தாம் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மாநகர சபை உறுப்பினருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

இந்த மேன்முறையீட்டு மனு வெற்றி பெற்றுச் சட்டத்தரணி மணிவண்ணனுக்கு நீதியைப் பெற்றுத் தருவேன் என்று அடிப்படை உரிமைகள் மற்றும் நிர்வாகச் சட்ட வல்லுநரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சஞ்சீவ ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவரே இந்த மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ். மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கக் கட்டளையிடுமாறு கோரிகொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. யாழ். மாநகர சபை எல்லையில் வதியும் வாக்காளர் ஒருவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சித் தேர்தல் விதியை மீறும் செயல் என மனுதாரர் மனுவில் சுட்டிக் காட்டியிருந்தார்.

எனவே அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ். மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கிக் கட்டளையிடவேண்டும் என மனுதாரர் கோரியிருந்தார்.

மனு தாரர் கோரிய இடைக்கால நிவாரணங்களில் ஒன்றான, மனு மீதான விசாரணை நிறைவடைந்து கட்டளையிடும்வரை யாழ். மாநகர சபை அமர்வுகளில் பங்கேற்க உறுப்பினர் வி.மணிவண்ணனுக்குத்தடை உத்தரவை வழங்கவேண்டும் என்பதை ஏற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட்டில் இடைக்காலக் கட்டளை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்தே மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சார்பில் மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றில் முன்வைக்கப்படுகிறது. இந்த மனு எதிர்வரும் 21ஆம் திகதி உயர் நீதிமன்றால் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன, பிரபல மேன்முறையீட்டு சட்ட நிபுணராக அறியப்படுகிறார். அவரே இந்த மனுவை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். (ஐ)

# 1.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள திட்டத்தை நிறுத்தியது ஜப்பான்

## அரசியல் ஸ்திரமின்மையே காரணம்

கொழும்பு, நவ. 03

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மை காரணமாக, ஜப்பான் இலங்கையுடனான இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் கையாளப்பட்ட இந்தத் திட்டம் தற்போது ஜப்பான் நிறுத்தி வைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேலும் இந்த இலகு ரயில் போக்குவரத்துத் திட்டமானது 1.5 பில்லியன் டொலர் மதிப்புடையது எனக் கூறப்பட்டது.(ஐ)

# பிரதமர் செயலக ஆவணத்தை பயன்படுத்தி சாகல அறிக்கை

## செல்லுப்படியற்றது என்கிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, நவ.04

பிரதமர் அலுவலகத்தின் ஆவணங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க வெளியிட்ட அறிக்கை செல்லுப்படியற்றது எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் –

இம்மாதம் முதலாம் திகதி சாகல ரத்நாயக்கவினால் வெளியிடப்பட்ட அறிக்கை முற்றாக நிராகரிக்கப்படவேண்டியது. அதனுடன் பிரதமர் அலுவலகத்துக்கோ பிரதமருக்கோ எவ்வித தொடர்பும் இல்லை.

பிரதமர் அலுவலகத்தின் முகவரியுடைய கடிதத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க வெளியிட்டுள்ள அறிக்கை செல்லுபடியற்ற மற்றும் உண்மையற்ற தகவல்களை உள்ளடக்கியது.

அத்துடன் சாகல ரத்நாயக்க என்ற பெயரில் எவரும் பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றுவதில்லை–என்றுள்ளது.(ஐ)

# தமிழ்–சிங்கள மக்கள் ஒன்றிணைய மஹிந்தவுடன் நிற்கவேண்டுமாம்!

## கூறுகிறார் சுப்பிரமணியன் சுவாமி

கொழும்பு, நவ. 04

இலங்கையின் மிகநெருக்கடியான தருணத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைவதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.எனவே இலங்கைத் தமிழர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நிற்கவேண்டும் என பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து இன்று வெள்ளிக்கிழமை அவர் தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பண்டாரநாயக்க–செல்வநாயகம் உடன்படிக்கை மீறப்பட்ட நிலையில் கடந்த 70 வருடங்களாகத் தமிழ் மக்கள் தமக்கான அதிகாரமில்லாமல் இருக்கின்றனர். விடுதலைப்புலிகளின் கொடூரங்களும் மறக்கப்படவேண்டும். எனவே இலங்கைத் தமிழர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நிற்கவேண்டும்– என்றுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுமாறு சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குழாய்க் கிணறு திருத்தப்பட்டு மக்களிடம் மீண்டும் கையளிப்பு



வவுனியா. நவ. 03

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த குழாய்க் கிணறு வவுனியா நகரசபை உபதவிசாளரால் திருத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

வவுனியா தாண்டிக்குளம் ரயில் நிலையத்துக்கு அருகே காணப்பட்ட குழாய்க்கிணறு நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.

இந்த விடயம் நகரசபை உப தவிசாளர் சு.குமாரசாமியின் கவனத்திற்கு நேற்றுப் கொண்டு செல்லப்பட்டதையடுத்து உடனடி அந்தக் குழாய்க்கிணறு திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள மக்களின் நீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)

# வறட்சி நிவாரணத்தைப் பெற அரச விடுதிகளில் சிரமதானம்

## வவுனியா மக்கள் விசனம்



வறட்சி நிவாரணம் வழங்குவதற்கு நகரசபைச் சிறுவர் பூங்காவை அண்டிய பகுதியிலுள்ள அரச விடுதிகள், திணைக்களங்களில் சிரமதானம் மேற்கொள்ளுமாறு வவுனியா நகரப் பகுதி கிராம சேவையாளர் கற்குழிப் பகுதியில் வசிக்கும் பெண்களிடம் தெரிவித்துள்ளார் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த மக்கள் தெரிவிக்கையில் –

வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கற்குழியில் வசிப்பவர்களில் வறட்சி நிவாரணம் பெற்றுக் கொள்பவர்கள் சிரமதானம் மேற்கொள்ளவேண்டும் என நகர கிராம அலுவலர் இ.உமாபதி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கற்குழிப் பகுதியிலுள்ள குடும்பப் பெண்கள் பலர் மழைக்கு மத்தியிலும் சிரமதானத்திற்குச் சென்றனர். இதன்போது அவர்களை அழைத்துக்கொண்டு சுமார் இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள நகரசபை சிறுவர் பூங்காவை அண்டிய பகுதிகளில் உள்ள அரச விடுதிகள், அரச திணைக்களங்கள் முன்பாகச் சிரமதானம் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து அந்தக் குடும்பப் பெண்கள் இவ்விடயத்தைபிரதேசசெயலாளர்கா.உதயராசாவின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோது அவர், நீங்கள் விரும்பினால் சிரமதானம் செய்யுங்கள். இல்லாவிட்டால் கிராம அலுவலரிடம் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுங்கள் என்று கூறியுள்ளார்.

எமது பகுதியாகக் கற்குழிப்பகுதியில் சிரமதானம் மேற்கொள்வதை விடுத்து இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள சிறுவர் பூங்கா வீதியிலுள்ள அரச விடுதிகளிலும், அரச திணைக்களங்களிலும் எம்மைச் சிரமதானம் மேற்கொள்வதற்குக் கிராம அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டார். நாங்கள் வீட்டிலிருந்த உடுப்புகளுடன் இப்பகுதிக்கு அழைத்து வரப்பட்டோம்–என்றனர். (ஐ-100)

# புத்தரின் தலை பொறித்த ஆடைகளால் பதற்ற நிலை

திருமலை, நவ. 04

திருகோணமலை நகரிலுள்ள பிரதான ஆடை வர்த்தக நிலையம் ஒன்றில், புத்தரின் தலை பொறிக்கப்பட்ட ஆடைகள் காணப்பட்டமையால், நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பதற்ற நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆடை வர்த்தக நிலையத்தில் இருந்த சட்டைத் துணிகளில், புத்தரின் தலை பொறிக்கப்பட்டிருந்தமையை அங்கு சென்ற சிலர் கண்டுள்ளனர். இதனை அடுத்து கடையை அண்மித்த பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குத்திருகோணமலை ஜெயசுமாராமய விகாரையின் விகாராதிபதி சென்றார் எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அந்த இடத்துக்குத் திருகோணமலைத் தலைமையகப் பொலிஸார் விரைந்து சென்று அந்தப் பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தினர்.

இந்த வர்த்தக நிலையத்தில் காணப்பட்ட புத்தரின் தலை பொறிக்கப்பட்ட ஆடைகளையும் பொலிஸார் கைப்பற்றியமையுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

அந்தக் கடையின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. (ஐ)

# தொடரை வென்றது பாகிஸ்தான் அணி!




நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியிலும், பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியில் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரைப் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை டுபாயில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய நியூசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு, 153 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக கொலின் முன்ரோ மற்றும் குர்ரே ஆண்டசன் ஆகியோர் தலா 44 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் சயீன் அப்ரிடி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து, 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக மொஹமட் ஹபீஸ், 40 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஆடம் மில்ன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, பாகிஸ்தான் அணி சார்பில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய சயீன் அப்ரிடி, தெரிவு செய்யப்பட்டார்.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து அசார் அலி ஓய்வு




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான அசார் அலி, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற போவதாக அறிவித்துள்ளார்.

எனினும், 33 வயதான அசார் அலி, தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு குறித்து அசார் அலி கூறிய கருத்துக்கள் இவை:

இந்த முடிவை பலத்த யோசனைக்குப் பிறகே எடுத்திருக்கிறேன். முடிவை அறிவிப்பதற்கு முன் தலைமை தேர்வாளர், அணித்தலைவர், கிரிக்கெட் சபைத் தலைவர் ஆகியோரிடம் பேசினேன்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டும் முழுமையாக கவனம் செலுத்த விரும்புகிறேன். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணிக்கு இளம் வீரர்கள் வருகின்றனர். அவர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர்.

அடுத்த ஆண்டு உலகக் கிண்ணம் வரவுள்ள நிலையில் ஒருநாள் கிரிக்கெட்டில் நான் இன்னும் சற்றுப் பங்களிக்க வேண்டியுள்ளது. ஆனால், மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில், அணியில் இருந்து விலக இது தான் சரியான நேரம்.

ஒருநாள் கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக எனக்கு ஒரு சிலர் ஆதரவு அளிக்கவில்லை. ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கு நான் சிறந்தவன் இல்லை என்று அவர்கள் நினைத்தார்கள். பாகிஸ்தான் அணியை அணித்தலைவராக வழிநடத்துவது எளிதான காரியம் கிடையாது. ஆனால், அணித்தலைவராக அதுவும் எனக்கு நல்ல நினைவுகள் - என்றார்.

அசார் அலி, இதற்கு முன்னதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். எனினும் தொடர் தோல்விகளினால் கடும் விமர்சனத்துக்குள்ளான அவர், அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கடந்த ஆண்டு அணித்தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

அதன் பிறகு அவரால் அணியில் நிலையாக நீடித்து இருக்க முடியவில்லை. அத்தோடு அவரும் போட்டிகளில் பெரிதாக சோபிக்கவும் இல்லை.

இந்த காலட்டத்திலேயே துடுப்பாட்டம், பந்து வீச்சு என அதிசிறந்த வீரர்களை பாகிஸ்தான் அணி உள்வாங்கியது.

அப்போது அசார் அலிக்கு பதிலாக இமாம் உல் ஹக் அணிக்குள் உள்வாங்கப்பட்டார். இமாம் உல் ஹக் அணியில் சிறப்பாக செயற்பட்டு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டதால், அசார் அலிக்கான வாய்ப்பு பறிபோனது.

எனினும், ஐ.சி.சி. சம்பியன்ஷிப் தொடரில் உள்வாங்கப்பட்ட அசார் அணி, இந்தியா அணிக்கெதிரான இறுதிப் போட்டியில் 59 ஓட்டங்களை பெற்று பாகிஸ்தான் அணி, சம்பியன் பட்டம் வெல்வதற்கு உதவினார்.

இருந்த போதிலும் புதுமுக வீரர்களின் துடுப்பாட்ட திறனால் அவரால் அணியில் நீடித்து நிலைக்க முடியவில்லை. ஆனால் இளம் வீரர்களின் எதிர்காலம் கருதி அவர் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

# ஆஸி. கிரிக்கெட் சபை தலைவர் பதவி விலகல்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த டேவிட் பீவெர், பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பந்தைச் சேதப்படுத்திய விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தினால் பான் கிராப்ட், டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித் ஆகியோருக்கு அபராதத்துடன் கூடிய தடை விதிக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தடையை நீக்க வேண்டும் என ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் வீரர்களுக்கான சங்கம் வலியுறுத்தி வருகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபைத் தேர்தலில், டேவிட் பீவெர் 2ஆவது முறையாக தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்திற்குப் பொறுப்பேற்று, டேவிட் பீவெர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவருக்கு பதிலாக இடைக்கால தலைவராக இயர்ல் எட்டிங்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

# டோட்டன்ஹாம் அணியுடனான ஒப்பந்தத்தை டேல் அலி நீடித்தார்




இங்கிலாந்து தேசிய உதைபந்தாட்ட அணியின் முன்னணி மத்திய கள வீரரான டேல் அலி முன்னணி கழக அணியான டோட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் அணியுடனான ஒப்பந்தத்தை நீடித்துள்ளார்.

22 வயதே ஆன மத்திய கள வீரரான டேல் அலி, கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து இங்கிலீஷ் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றும் டோட்டன்ஹாம் அணிக்காக விளையாடி வருகிறார்.

ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரில், இங்கிலாந்து அணி அரையிறுதி வரை முன்னேறுவதற்கு இவரின் பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந்திருந்தது.

அத்தோடு, டோட்டன்ஹாம் அணிக்காகவும் சிறப்பாக விளையாடினார். ஆகையால் இவரை நீண்ட காலமாகத் தக்கவைக்க அணி நிர்வாக விரும்பியது.

அத்தோடு அவரோடு பேச்சிலும் ஈடுபட்டது. இந்த நிலையில் தற்போது, வாரத்திற்கு ஒரு இலட்சம் பவுண்ஸ்கள் சம்பளம் அடிப்படையில், டோட்டன்ஹாம் அணியுடனான ஒப்பந்தத்தை எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளார்.

டேல் அணி ஏற்கனவே வாரத்துக்கு ஐம்பதாயிரம் பவுண்ஸ்கள் சம்பளமாக வாங்கிக் கொண்டிருந்தார். தற்போது அது ஒரு இலட்சம் பவுண்ஸ்களாக உயர்ந்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்து தேசிய உதைபந்து அணிக்காக விளையாடி வரும் டேல் அலி, இதுவரை 31 போட்டிகளில் விளையாடி 3 கோல்களை அடித்துள்ளார்.

மேலும், டோட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் கழக அணிக்காக 111 போட்டிகளில் விளையாடி 38 கோல்களை அடித்துள்ளார்.

# பும்ரா மீண்டும் முதலிடம்




ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில், இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா 841 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தை பெற்றுள்ளார்.

மேற்கு இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை இந்திய அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியதை தொடர்ந்து புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அந்தப் பட்டியலிலேயே அவருக்கு முதலாவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் 2ஆவது இடத்தில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ரஷித்கானும் (788 புள்ளி), 3ஆவது இடத்தில் இந்தியாவின் குல்தீப் யாதவும் (723 புள்ளி) உள்ளனர்.

மேலும் மேற்கு இந்தியாவுக்கு எதிரான தொடரில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய சுழற்பந்து வீச்சாளர் யுஸ்வேந்திர சாஹல் டொப் 10ஆவது இடத்திற்குள் நுழைவது இதுவே முதல் முறையாகும்.

இதேபோன்று சிறந்த துடுப்பாட்டர்கள் தரவரிசையில் இந்திய கிரிக்கெட் தலைவர் விராட் கோஹ்லி தொடர்ந்து தனது முதலிடத்தைத் தக்க வைத்துள்ளார்.

மேற்கு இந்தியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட தொடரில் 3 சதம் உட்பட 453 புள்ளிகளை பெற்று சாதனை படைத்த விராட் கோஹ்லி, தற்போது கூடுதலாக 15 புள்ளிகளை பெற்று தரவரிசை புள்ளி எண்ணிக்கையை 899 ஆக உயர்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ரணிலுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடுநிலை வகிப்பதென்பது அராஜகம் எனவும், அது மஹிந்த அரசு வெற்றியீட்டுவதற்கு வழி வகுக்கக்கூடிய ஜனநாயக விரோதச் செயல் எனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இது தொடர்பில் கூட்டமைப்பு நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி, நாடாளுமன்ற அமர்வுகள் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் உயர்மட்டக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு கூடி ஆராய்ந்து, பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.

01) இலங்கை அரசமைப்பின் பிரகாரம் பதவியிலிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதியிடம் இல்லை. 19ஆவது திருத்தத்துக்கு முன்னர் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்த அதிகாரம், 19ஆவது திருத்தத்தின் மூலம் திட்டவட்டமாக நீக்கப்பட்டது.

ஆகையால், பிரதமரை நீக்குவதாகவும், வேறொருவரைப் பிரதமராக நியமிப்பதாகவும் பிரகடனப்படுத்தி, ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புகள் அரசமைப்புக்கு முரணானவையும் சட்டவிரோதமானவையுமாகும்.

02) மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளை நிறுத்தியதாக ஜனாதிபதி விடுத்த பிரகடனத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக விரோதச் செயலாகவும், நாடாளுமன்றத்தின் மீயுயர் தன்மையைப் பாதிக்கின்ற செயலாகவுமே நோக்குகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக அறிவித்துவிட்டு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை அவர் நிரூபிக்கவேண்டிய தேவையைத் தாமதிப்பதற்கும் முறியடிப்பதற்கும் ஏதுவாக செய்யப்பட்ட கால நீடிப்பே இதுவாகும்.

இக்கால நீடிப்பை உபயோகித்து அமைச்சுப் பதவிகளையும் பணத்தையும் இலஞ்சமாகக் கொடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கத்துக்கு முறைகேடாக இழுத்தெடுத்து, நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கபடமாகப் பெறுவதற்குப் புதிய அரசு முயல்கின்றது. இது ஜனநாயக விரோதச் செயலாகும்.

03) மேற்சொல்லப்பட்ட காரணங்களுக்காக, அரசமைப்பை முற்றிலும் மீறுவதாகவும் சட்ட விரோதமாகவும் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில் 'நடுநிலை' வகிப்பதென்பது அராஜம் அது வெற்றியீட்டுவதற்கு வழிவகுக்கக்கூடிய ஜனநாயக விரோத செயல் என்பதே எமது நிலைப்பாடு - என்றுள்ளது. (ஐ)

## மிகவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

அரசியல்வாதிகளின் இருப்புக்கு அதிகாரம் முக முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

## ஆட்சியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் விருப்பம் மற்றும் அழைப்பின் பேரிலேயே, எனது தந்தை இலங்கையின் பிரதமராகப் பதவியேற்றார்.

நாட்டில், பொருளாதார அரசியல் சமூக உறுதிப்பாட்டைக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து, கடந்த பல மாதங்களாகவே, அவர்கள் இருவரும் ஆராய்ந்து வந்தனர்.

நாங்கள் அறிந்தவரை இந்தப் பேச்சுகள் கடந்த நான்கு, ஐந்து மாதங்களாகவே இடம்பெற்று வந்தன. பழைய சகாக்கள் என்ற அடிப்படையில், 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அவர்கள் தொடர்பில் இருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்கான சதி குறித்து குறித்து ரணில் விக்கிரமசிங்க அப்போது எதையும் கூறவில்லை. இதனுடன் தொடர்புடைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குரல் பதிவுகள் வழங்கப்பட்டன.

இந்தச் சதித்திட்டம் பற்றிய குற்றச்சாட்டு பாரதூரமானது. ஆனால், இதற்காக மாத்திரம் மைத்திரி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆட்சி மாற்றத்துக்கு வேறு பல காரணங்களும் இருந்தன.

மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து பணியாற்றுவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் ஆரம்பத்திலிருந்து வெற்றியளிக்கவில்லை.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட முதல் நாளில் இருந்தே, இந்தக் கூட்டணி வெற்றிபெறாது என்பது எங்களுக்குத் தெரியும்.

இருவரும் வெவ்வேறு பின்னணியிலிருந்து வந்தவர்கள், அவர்கள் இருவரும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்டவர்கள், அவர்களின் பொருளாதார, சமூக, அரசியல் கொள்கைகளுக்கு இடையில் பாரிய வித்தியாசம் உள்ளது. ஆகவே, இந்த விடயங்கள் ஒருபோதும் இணையாது.

ஆனால், துரதிஷ்டவசமாக அப்போது எனது தந்தையைத் தோற்கடிப்பதற்கான வாய்ப்பாக அவர்கள் இதனைக் கருதினார்கள்.

இந்தக் கூட்டணியின் முழு நோக்கமும் தேர்தலாக இருந்ததே தவிர, இவர்களிடம் நாட்டை ஆட்சி செய்வதற்கான திட்டமிருக்கவில்லை.

தற்போது இடம்பெற்றுள்ள மாற்றங்களால் இந்தியா கவலையடைய வேண்டிய அவசியமில்லை.

எனது தந்தையோ அல்லது அவரது அரசோ எடுத்த எந்த முடிவின் பின்னாலும், சீன அரசோ அல்லது வெளிநாடொன்றின் செல்வாக்கோ இருக்கவில்லை.

கடந்த காலங்களில் இந்தியா - இலங்கை இடையே புரிந்துணர்வின்மை காணப்பட்டது எமக்குத் தெரியும். இந்தியா கவலையடைய வேண்டியதில்லை. இலங்கையின் அபிவிருத்தியில் இந்தியா பங்காளியாக விளங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நீக்கப்பட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.வியாழேந்திரன் மைத்திரி - மஹிந்த அணிப் பக்கம் தாவியமையையடுத்து அவர் புளொட் அமைப்பிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் தமது கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளமையினால், இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சியின் செயலருக்கும் அவர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வியாழேந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் புளொட் அமைப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தார். அவரை உடனடியாக கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புளொட் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறியுள்ளதாவது -

அண்மைய நாள்களாக வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு நேற்று (நேற்று முன் தினம்) தாயகம் திரும்பும் வரை, கட்சியின் தலைமையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த ச.வியாழேந்திரன், நாடு திரும்பிய பின்னர் மேற்கொண்டு வரும் அரசியல் நடவடிக்கைகள் புரிந்து கொள்ள முடியாதனவாக உள்ளன. கட்சி யின் சார்பில் அவருடன் தொடர்பு கொள்ளத் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் பயனளித்திருக்கவில்லை. இந்த விடயங்கள் யாவும் ஏற்கனவே திட்டமிடப்பட்டு அதன் தொடராகவே நடந்தேறியவை என்பதை எம்மால் நம்ப முடியாமல் உள்ளது.

அண்மைய நாட்களில் அவரின் செவ்விகள், கலந்துரையாடல்களை அவதானித்தோருக்கும் அவரது இந்த தீர்மானம் மிகுந்த அதிர்ச்சியையே கொடுத்திருக்கும். நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், எமது கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போதிலும் கூட, அவரது மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள் எவற்றிலும் கட்சி இற்றைவரையிலும் தலையீடுகளை மேற்கொண்டிருந்ததில்லை. மாறாக அவரை உற்சாகப்படுத்தியும் பூரண சுதந்திரம் வழங்கியுமே வந்திருக்கின்றது.

எமது கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன், வியாழேந்திரன் மீது கொண்டிருந்த அதீத நம்பிக்கைக்கு இழைத்த துரோகமாகவே அவரது இன்றைய நடவடிக்கைகளை நாம் காண்கின்றோம். கட்சியின் கட்டுக்கோப்பையும் தீர்மானத்தையும் மீறியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு முரணான வகையில் செயற்பட்டிருக்கும் ச.வியாழேந்திரன் மீது விரைவில் கட்சியின் மத்திய குழுவினூடாக ஒழுக்காற்று நடவடிக்கையெடுத்து அந்த தீர்மானத்தை தமிழரசுக் கட்சியின் மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கவுள்ளோம்.

மேலும், எவரும் எதிர்பார்த்திராத வகையில் அமைந்த அவரது செயற்பாடு, கட்சியின் அங்கத்தவர்களும் அவரைத் தேர்ந்தெடுத்த மக்களும், அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையின்மீது பாரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது என்பதை தெரியப்படுத்துகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## 16ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நிலைக்கமைய எதிர்வரும் 16 ஆம் திகதியே நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கூட்டப்படுமென அவர் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## அம்பாறைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்தவிடம் சரணாகதி அடையவும் மாட்டேன். தன்மானமுள்ள தமிழன் நான். அறப்போர் அரிய நாயகத்தின் பரம்பரையில் வந்த வாரிசு என்பதனைத் தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மஹிந்த பக்கம் நான் தாவப் போகின்றேன் என்று பல ஊடகங்கள் வாயிலாகவும் முகநூல் வாயிலாகவும் வரும் வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கூட்டமைப்பு நேற்று அறிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆயினும் இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களும் கலந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கூட்டமைப்பின் வியாழேந்திரன் எம்.பி. மஹிந்த பக்கம் தாவி பிரதியமைச்சராகப் பதவியேற்றுள்ள நிலையில் அவருடன் தாம் எப்படி இந்தச் சந்திப்பில் பங்கேற்பது எனக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் உயர்மட்டக் குழுக் கூட்டம், நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இது தொடர்பில் கூட்டமைப்பு நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் -

அமைச்சுப் பதவிகளையும் பணத்தையும் இலஞ்சமாகக் கொடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கத்துக்கு முறைகேடாக இழுத்தெடுத்து, நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கபடமாகப் பெறுவதற்குப் புதிய அரசு முயல்கின்றது.

இந்த ஜனநாயக விரோதச் செயலை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. கடும் எதிர்ப்பையும் நாம் தெரிவித்துக்கொள்கின் றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரனும் இந்தச் சதி முயற்சிக்குப் பலியானமை குறித்து எமது கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிடுகின்றோம். அவருக்கு எதிரான உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் - என்றுள்ளது. (ஐ)

## ரயிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தைச் சேர்ந்த ஸ்டீபன் என்று அழைக்கப்படும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இளைஞனின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-100)

## இரத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றம் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காணும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நம்பிக்கை இழந்த சிலர் இரத்தக்களறியை ஏற்படுத்தக்கூடும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏ.எவ்.பிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி சிறிசேன தடைகளை ஏற்படுத்தி வருகின்ற போதிலும் நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு ஜே.வி.பியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஆதரவளித்து வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் சட்டபூர்வமானவை அல்ல. அரசமைப்பிற்கு முரணானவை என நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியுடன் மோதல் வரும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் பதவி நீக்கம் வரும் என எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றால் தற்போதைய நெருக்கடி நீண்ட நாள்கள் நீடிக்காது ஆகக்கூடியது பத்து நாள்கள் நீடிக்கும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தின் ஆதிபத்தியத்தை உறுதி செய்வதே முன்னுரிமைக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

தனது 'ருவிட்டர்' பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கண்மூடித்தனமான செயல்கள் இலங்கையில் உறுதியற்ற வன்முறையை உருவாக்கும் சாத்தியம் உள்ளது.

எச்சரிக்கை அறிகுறிகளைப் புறக்கணிக்க முடியாது. இலங்கையிலும், பிராந்தியத்திலும் உள்ள தலைவர்களுடன் இணைந்து, நெருக்கடியைத் தீர்க்க ஐ.நா. அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை அரசமைப்பு நெருக்கடியின் ஆபத்துகள் தெளிவாக உள்ளன. வன்முறைக்குச் சாத்தியம் உள்ளது.

ராஜபக்ஷ மீண்டும் பதவிக்கு வருவதால், இன நல்லிணக்க முயற்சிகளை முடிவுக்கு வரும்.

அமெரிக்காவின் இராஜதந்திரம் எங்கே? உதவிகள் இடைநிறுத்தப்படும், தடைகள் இலக்கு வைக்கப்படும் என்பதை இலங்கை தெரிந்துகொள்ள வேண்டும் - என்று அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிவசக்தி ஆனந்தனுக்கு எதிராக நீதிமன்றை நாடுகிறார் செல்வம்



கொழும்பு, நவ. 04

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு 150 கோடி ரூபாவைச் செல்வம் அடைக்கலநாதன் பெற்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக கூறும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட சிவசக்தி ஆனந்தன், நான் 150 கோடி பெற்றுக் கொண்டதாகவும் அது இந்தியாவிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டதாகவும் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

இது சம்பந்தமாக அவருக்கு எதிராக நான் நீதிமன்றம் செல்ல இருக்கின்றேன். மான நஷ்ட வழக்கு போடுவதற்கான முயற்சியை நான் எனது வழக்கறிஞர்களோடு கலந்துரையாடி வருகின்றேன்.

அந்தவகையிலேயே 150 கோடி ரூபாநஷ்டஈட்டை அவரிடம் கோருவதற்காக நிச்சயமாக நான் நீதிமன்றம் செல்வேன். நீதிமன்றத்திலேயே அவர் அதனை நிரூபிக்கட்டும் என்பது என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் எனது சிறப்புரிமை மீறப்பட்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தமட்டில் அவர் மனித உரிமை மீறல் தொடர்பில் ஒரு விசாரணை செய்யப்படவேண்டியவர். ஐ.நா தீர்மானத்தில் அவருடைய பெயரும் இருக்கிறது.

எங்கள் மக்கள் அவர் மீண்டும் ஆட்சியைப் பெறக்கூடாது என்பதில் மிகவும் ஆளுமையோடு செயற்பட்டு புதிய ஜனாதிபதியை கொண்டுவந்திருந்தார்கள். அந்தப் புதிய ஜனாதிபதி கூட தற்போது மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லி இருக்கின்றார்.

சமஷ்டி முறையைக் கொடுக்க முடியாது. வடக்கு – கிழக்கை இணைக்க முடியாது. அவ்வாறு கொடுப்பதாக இருந்தால் தனது இறப்புக்குப் பிறகு தான் அதைக் கொடுக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்ட அவர் இவ்வாறு சொல்லியிருக்கின்றார் – என்றார். (ஐ)

# சிவசக்தி ஆனந்தன் மீது சார்ள்ஸ் எம்.பி. பாய்ச்சல்

கொழும்பு, நவ. 04

என் மீது குற்றம் சுமத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மீது கடும் நவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் நடைமுறை அரசிடம் இருந்து 30 கோடி ரூபா பணம் பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளமைக்கு எதிராக நான் கொழும்பில் உள்ள குற்றத்தடுப்பு முறைப்பாட்டுப் பணிப்பாளரிடம் எழுத்துப்பூர்வமாக முறைப்பாடொன்றைச் செய்துள்ளேன்.

தற்போது நாட்டில் நிலவும் குழப்பகரமான அரசியல் சூழலில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும், அரசியல் தலைவர்கள் மீதும் பரவலாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தவண்ணம் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் கேட்டபோதே சார்ள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# வியாழேந்திரன் மீது கடும் விமர்சனங்கள்

கொழும்பு, நவ. 04

மைத்திரி – மஹிந்த பக்கம் தாவி பிரதி அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரனுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் சமூக வலைத்தளங்களில் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

'வியாழேந்திரனே! பல கோடிப் பணத்துக்காகவும் பாதி அமைச்சுக்காகவும் (பிரதி அமைச்சு) மைத்திரி – மஹிந்த வீசிய வலையில் சிக்கி மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கு நீர் செய்த துரோகத்தை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையை மீறிய உமக்கு கூட்டமைப்பின் தலைமையும் தக்க பாடம் புகட்டி உம்மை மண் கவ்வச் செய்யும்!' – என்று அந்தப் பதவிகளில் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சபை முதல்வராக தினேஷ் குணவர்தன

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவை, சபை முதல்வராக நியமிப்பதற்கான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என அரச ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் பேச்சு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து, நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கெஹெலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# ராஜாங்க அமைச்சராக பௌசி



கொழும்பு, நவ. 03

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌசி, தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் மத விவகார இராஜாங்க அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையிலேயே நேற்று அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ஐ)

# இரண்டரை லட்சம் ரூபாவுக்கு வவுனியாவில் கள்ள நோட்டுகள்

## பொலிஸாரிடம் சிக்கின





வவுனியாவில் 2 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்களுடன் இளைஞர் ஒருவரை நேற்று மதியம் 2 மணியளவில் தாம் கைது செய்துள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலின் அடிப்படையில் சிறு குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனியா, தேக்கவத்தை பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன.

இவற்றைத் தனது உடைமையில் வைத்திருந்த புத்தளம், மதுரங்குளி, ஜின்னாவத்தைப் பகுதியைச் சேர்ந்த முகமட் சப்ராஸ் (வயது 24) என்பவரையும் பொலிஸார் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இந்த நபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில. தாங்கள் ஆஜர்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவு கொலை வழக்கில் இருவருக்கு மரண தண்டனை



முல்லைத்தீவு பகுதியில் கடந்த 2013ஆம்ஆண்டு செப்டெம்பர் மாதம் அரசியல்கட்சிஅலுவலகம் ஒன்றில் ஒரே கட்சியை சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவரைத் தாக்கிக் கொலை செய்த குற்றத்துக்காக, இரண்டு பேருக்கு வவுனியா மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணையின் பின்னர் வழக்கு மேலதிக விசாரணைகளிற்காக 2017 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகளிற்கெதிரான குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல்செய்யபட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

தீர்ப்பிற்காக நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது வழக்கு.

முதலாம் எதிரியாக வள்ளிபுனம் பகுதியை சேர்ந்த ஒருவரும் இரண்டாம் எதிரியும் நேற்று மன்றில்ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர். அவ்விருவரையும் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்று அவர்களுக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

# தன்னைத் தானே வீட்டுக்காவலில் வைத்துள்ள ரணில்

## விமல் கிண்டல்



கொழும்பு, நவ. 04

ரணில் விக்கிரமசிங்க தன்னைத் தானே வீட்டுக்காவலில் வைத்துக் கொண்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியினர் தற்போது இடம்பெயர்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் தன்னைத் தானே வீட்டுக்காவலில் வைத்துக்கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவே உலகில் தன்னைத் தானே வீட்டுக்காவலில் வைத்துக்கொண்டமைக்கான முதல் உதாரணம்.

இவர்கள் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. ரணில் விக்ரமசிங்கவின் அரசு எந்தளவுக்கு நாட்டை சூறையாடியது என்பது தற்போது தெரிகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராகப் பதவியேற்றுச் சிறிது நேரத்தில் எரிபொருள் விலையைக் குறைக்க முடிந்தது. பெருமளவில் வரிச் சுமையைக் குறைக்க முடிந்தது. சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் இரத்து செய்யப்பட்டது – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.